விலை ரூபா: 6.00

பக்கங்கள்:-பத்து **Registered as a News paper in Sri Lanka**

# வலம்புரி

**VALAMPURI**

சங்கு 04 வள்ளுவர் ஆண்டு 2034 தை 18 சனிக்கிழமை (01.02.2003) தொலைபேசி- 2223378 ஒலி 44

தரமான மூக்கு கண்ணாடிகளைப் பெற்றுக் கொள்ளவும், சிறந்த முறையில் பற்களைக் கட்டிக் கொள்ளவும், மிதப்புப் பற்களுக்கு கிளிப் போட்டுக் கொள்ளவும் நாடவேண்டிய இடம்



பி.ஜே.பர்னான்டோ

இல.542, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்

## அமைச்சர்கள் வருகையை எதிர்த்து குடாநாட்டில் கறுப்புக் கொடி

### அமைச்சர் ஜயலத்தின் யாழ்.விஜயம்ரத்து

(யாழ்ப்பாணம்)

வடக்குப் புனர்வாழ்வு, புனரமைப்பு,அகதிகள் மீள் குடியேற்ற அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தனா நேற்று யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்வதாக இருந்த போதும் இறுதி நேரத்தில் அவரது விஜயம் ரத்துச் செய்யப்பட்டது.

அமைச்சருக்குப் பதிலாக அவரின் செயலாளர் இ.ஜெயரத்தினமே வருகை தந்தார்.

அமைச்சர் முக்கியமான கூட்டம் ஒன்றில் கலந்து கொள்ளஇருப்பதாலேயே அவரின் யாழ்.விஜயம் ரத்துச் செய்யப்பட்டதாக அவரின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை யாழ்.வரத்திட்டமிட்டிருந்த அமைச்சரின் வருகைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் நேற்று யாழ்.குடாநாட்டின் நகரப் பகுதிகள் எங்கும் கறுப்புக் கொடிகள கட்டப்பட்டிருந்தன.போக்குவரத்துச் சேவையில் வாகனங்கள் கறுப்புக் கொடிகளை பறக்கவிட்டவாறு சேவையில் ஈடுபட்டன.பாடசாலை மாணவர்களும் கறுப்புப் பட்டி அணிந்தவாறே பாடசாலைக்குச் சென்றனர்.

(இ-4,19,77,43)

## ஆயுதம் தரித்த இரு படையினர் விழிப்புக் குழுவிடம் அகப்பட்டனர்

### குடத்தனையில் நேற்றிரவு சம்பவம்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கு குடத்தனைப் பகுதியில் நேற்றிரவு 9.30மணியளவில் ஆயுதங்களுடன் சென்ற இராணுவத்தினர் இருவர் அப்பகுதி விழிப்புக் குழுவினரால் மடக்கிப்பிடிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

பிடிக்கப்பட்ட இராணுவத்தினர் இருவரும் விழிப்புக் குழுவினரால் தடுத்துவைக்கப்பட்டதுடன் சம்பவம் தொடர்பாக யாழ்.மாவட்ட அரசியல் துறையினருக்கும் உடனடியாக அறிவிக்கப்பட்டது.

அரசியல் துறையினர் யாழ்.மாவட்ட கண்காணிப்புக் குழுவினருடன் தொடர்பு கொண்டு நிலைமையை விளக்கிக் கூறியதுடன் சம்பவ இடத்திற்கு நேரில் செல்வதற்கான முயற்சியிலும் நேற்று நள்ளிரவு

(10ம் பக்கம் பார்க்க)



# புலிகள் சிறுவர்களை படையில் சேர்ப்பதில்லை!

## யுனிசெவ் பணிப்பாளரிடம் தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

**கடந்த இருபது வருட காலப் போரினால்எமது சிறுவர்கள் பல்வேறு வகைகளிலும் பலத்தபாதிப்புக்களுக்கு உள்ளாகியுள்ளனர்.இந்நிலையில் எமது சிறுவர்களை மேலும் பாதிப்புக்குள்ளாக்கும் நோக்குடன் சிங்களப் பேரினவாதிகள் விடுதலைப் புலிகள் சிறுவர்களைப் போரில் ஈடுபடுத்துவதற்குப் படையில் சேர்த்து வருகிறார்கள் எனப்படுமோசமான பிரசாரங்களை சர்வதேச ரீதியில் செய்து வருகின்றனர். இவ்வாறு யுனிசெவ் நிறுவன நிறைவேற்றுப் பணிப்பாளர் ஹரோல்ட்ஹலானியிடம் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் சுட்டிக்காட்டியுள்ளார்.**

சிறுவர்களைப் போரில் ஈடுபடுத்துவது தொடர்பாக யுனிசெவ் நிறுவன நிறைவேற்றுப் பணிப்பாளர் ஹரோல்ட்ஹலானி நேற்று கிளிநொச்சியில் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேசிய போதே அவர் மேற்கண்டவாறு எடுத்துக் கூறியுள்ளார்.

நேற்று கிளிநொச்சியில் நடைபெற்ற யுனிசெவ் நிறுவன நிறைவேற்றுப் பணிப்பாளருடனான சந்திப்பை அடுத்தே சு.ப.தமிழ்ச்செல்வன் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

சர்வதேச அமைப்பான நிறுவனப் பணிப்பாளர் ஹரோல்ட்ஹலானி கிளிநொச்சிக்கு விஜயம் செய்திருப்பது ஆரோக்கியமான விடயமாகும்.அவர் அங்குள்ள உண்மைத் தள நிலைமைகளை சரியான பார்வையில் நோக்கி எம்முடன் கலந்துரையாடியமை எமக்கு மகிழ்ச்சியைத் தருகிறது.

சிறுவர்களைப் படைக்குச் சேர்ப்பது தொடர்பாக திரிபுபடுத்தப்பட்டு வரும் பிரசாரங்கள் உண்மைக்கு புறம்பானவை என்று அவருக்கு விளக்கமளித்துள்ளோம்.இதனைத் தொடர்ந்து இங்கு நிலவும் உண்மைத் தன்மைகளை அவர் மேலும் சென்று பார்த்து மக்கள் மத்தியில் சென்று கேட்டும் அறிந்துள்ளார்.

கடந்த இருபது ஆண்டுகளுக்கு மேலாக இடம் பெற்றுவரும் போரினால் எமது சிறுவர்கள் மிக மோசமகாப் பாதிக்கப்பட்டுள்ளனர்.பாடசாலைகளில் கற்கும் போதும்,வீடுகளில் இருக்கும் போதும், விமானக் குண்டு வீச்சுக்களினால் கொல்லப்பட்டுள்ளனர்,அங்கவீனமாக்கப்பட்டுள்ளனர். அடிப்படை வசதிகள் எதுவும் அற்ற அவமான நிலையில் சிறுவர்கள் வாழ்கின்றனர்.இந் நிலையில் சிறுவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த எமது தலைவரின் வழிகாட்டலின் படி யுனிசெவ் நிறுவனத்துடன் இணைந்து செயலாற்றவுள்ளோம்.

(10ம்பக்கம் பார்க்க)

## அதாவுல அணி மீதான தடை எதிர்வரும் 10ந் திகதி வரை நீடிப்பு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மாற்று அணியின் ஏ.எல்.அதாவுல, எஸ்.சுபைர்தீன்,டாக்டர் உதுமாலெப்பை உட்பட 19பேர்கள் கட்சியின் பதவிகளில் செயல்படுவதை இடை நிறுத்த வேண்டும் என்று அமைச்சர் ரவூப் ஹக்கீம் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுமீது நீதிபதி மாலினி குணரட்ண முன்னிலையில் நேற்று விசாரணைகள் நடைபெற்றன.

விசாரணையின் போது 20வது எதிர் மனுதாரரான ஹசன்அலி சார்பில் ஆஜரான சட்டத்தரணி பாயிசார் முஸ்தப்பா,தாருசலாமில் டிசம்பர் மாதம் 1ம் திகதி நடைபெற்ற கூட்டத்தின் வீடியோப் பிரதியை பார்வையிட அனுமதி வழங்க வேண்டும்

(10ம் பக்கம் பார்க்க)

## புனர்வாழ்வு அமைச்சு பாரிய திட்டங்களை நடை முறைப்படுத்தாது

### புனர்வாழ்வு அமைச்சின் செயலாளர் தெரிவிப்பு

(தென்மராட்சி)

புனர்வாழ்வு புனரமைப்பு அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சின் மூலம் இனிமேல் பாரிய திட்டங்கள் எதுவும நடைமுறைப்படுத்தப்படமாட்டாது என அமைச்சின் செயலாளரான இ.ஜெயரத்தினம் யாழ்.அரச செயலகத்தில் நேற்று நடைபெற்ற கூட்டத்தில் தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் செ.பத்மநாதன் தலைமையில் நடைபெற்ற புனர்வாழ்வு புனரமைப்பு அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சின் செயற் திட்டங்கள் தொடர்பான கலந்துரையாடலின் போது அமைச்சின் மேலதிக செயலாளர் எஸ்.குமாரதாஸன் நாடாளுமன்ற உறுப்பினர் அவிநாயகமூர்த்தி, திணைக்களத் தலைவர்களும் மற்றும் கூட்டுறவு அமைப்புக்களின் தலைவர்களும் சமூகமளித்திருந்தனர்.

இக் கலந்துரையாடலின் போது அமைச்சின் செயலாளர் இ.ஜெயரத்தினம் தொடர்ந்து கூறுகையில்,

இக் கலந்துரையாடலில் கலந்து கொள்ள அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தனா நேரில் சமூகமளிப்பதாக இருந்த போதிலும் இறுதி நேரத்தில் பாராளுமன்ற விவகாரத்தில் அவசியம் பங்கு கொள்ளவேண்டி இருந்தமை காரணமாக வரமுடியவில்லை. எமது அமைச்சிற்கு இவ் வருடம் 3 ஆயிரம் மில்லியன் நிதிவழங்கும் படி நாம் அரசாங்கத்தை கேட்டிருந்தபோதிலும் கூட எமக்கு அரசினால்

(10ம் பக்கம் பார்க்க)

## தென்பகுதி சுற்றுலா மாணவர்கள் குழப்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டைச் சேர்ந்த பாடசாலை மாணவர்கள் இன்று, தென் பகுதிக்கு வடக்குத்தெற்கு உறவுப்பால நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மேற் கொள்ளவிருந்த விஜயம் குறித்து உறுதியான முடிவுகள் எதுவும்,நிகழ்வின் ஏற்பாட்டாளர்களால் மாணவர்களுக்கு அறிவிக்கப்படவில்லை.

இதனால் மாணவர்கள் மத்தியில் பெரும் குழப்பம் நிலவுகிறது. (இ)

## மீளக்குடியமரும் குடும்பங்களுக்கு உதவிப் பணம் அதிகரிக்கப்படும்

(கொழும்பு)

வடக்குக் கிழக்கில் மீளக்குடியமர உள்ள குடும்பங்களுக்கு இதுவரை வழங்கப்பட்டு வந்த மீள்குடியமர்வு உதவித் தொகை மற்றும் வீட்டு வசதிகளை ஏற்படுத்துவதற்கான உதவிப் பணக் கொடுப்பனவுகள் அதிகரிக்கப்படவுள்ளன.

இதற்கான அங்கீகாரத்தை அமைச்சரவை நிதி அமைச்சருக்கு வழங்கியுள்ளது.மீள்குடியமர்வுக்கான உதவி 15 ஆயிரத்தில் இருந்து ரூபா 25 ஆயிரமாக்வும் வீடுதிருத்துவதற்கான கொடுப்பனவு ரூபா 50 ஆயிரத்தில் இருந்து 75 ஆயிரமாகவும் உயர்த்தப்படவுள்ளது.

புனர்வாழ்வு அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தனா 2இலட்சம் குடும்பங்களை மீளக்குடியமர்த்துவதற்குத் தேவவையான நிதிஒதுக்கீட்டிற்கான அங்கீகாரத்தை அமைச்சரவையிடம் கோரியிருந்தார்.நலன் புரிநிலையங்களில் தங்கியிருக்கும்42 ஆயிரம்

(10ம் பக்கம் பார்க்க)

## விஷேட பொலிஸாரின் விசாரணை ஆரம்பம்

(லண்டன்)

வடக்குக் கிழக்கில் சிறுவர்கள் படையில் சேர்க்கப்படுவது தொடர்பான முறைப்பாடுகளை விஷேட பொலிஸ் குழுக்கள் ஆராய்ந்து வருகிறது.

மட்டக்களப்பு,திருகோணமலை,அம்பாறை,வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில்,தலா 6பேர் கொண்ட ஐந்து குழுக்கள் நேற்று முன்தினம்

(10ம் பக்கம் பார்க்க)

# அரச ஊழியர்களுக்கான புதிய ஓய்வூதியத்திட்டம்

பேராசிரியர் ஜே. ஜினதாஸ

ஓய்வூதியம் அல்லது சமூக பாது காப்பு உதவித்தொகை என்பது ஒருவர் முதுமை அடையும் போது, கணவன் அல்லது மனைவியை இழக்கும் போது அவர் ஏற்கனவே அரசாங்கத்துக்குச் செய்த சேவைக்காக உயிர் வாழும் வரை பயன்படுத்திக் கொள்வதற்காக வழங்கப்படும் ஒரு மாதாந்த ஒழுங்கு முறைக் கொடுப்பனவாகும் சில சமயங்களில்இத்தொகை அவரும் அரசும் மாதாந்தம் அளித்து வந்துள்ள பங்களிப்பிலிருந்து வழங்கப் படுவதாகவும் இருக்கும்.

ஊழியர் ஒருவர் ஓய்வூதிய நிதிக்கு பங்களிப்புச் செய்து வருகிறாரெனில் அரச திறைசேரி அவருக்காக ஒரு பகுதியை மட்டுமே ஒதுக்கீடு செய்வதாய் இருக்கும். அவ்வாறு இல்லாத நிலையில் திறைசேரியே முழுத்தொகையையும் செலுத்தியாக வேண்டும். இந்த நிலைமை தான் இலங்கையில் இன்று நிலவி வருகின்றது. ஒருவர் இறுதியாக பெற்றுள்ள சம்பளத்தின் ஏறத்தாள 90வீதத்தை பென்சனாக திறைசேரி செலுத்துகின்றது.இவ்வாறான நிலைமையில் முதுமை காரணமாக ஓய்வு பெறுவோர் அதிகரிக்கும் போது இவர்களுக்கான ஓய்வூதியக் கொடுப்பனவின் பெரும் பளுவை திறைசேரி சுமக்க நேர்கின்றது. ஊழியரோ எதுவித பங்களிப்புமின்றி ஓயவூதியத்தை மகிழ்ச்சியுடன் அனுபவிக்கமுடிகின்றது.

இது ஒரு பொருளாதார சீரற்ற பழங்கால நடைமுறையாகும். இது வரி செலுத்துவோரைச் சுரண்டுவதாகவும் எதிர்கால இளம் சந்ததியினருக்காக நாட்டின் வளர்ச்சியை பாதிப்பதாகவும் இருக்கின்றது.

இலங்கையின் மக்கள் தொகை வளர்ந்து வருகின்றது. வயது முதிர்ந்த மக்கள் அதிகரித்து வருகிறார்கள். இவர்களால் பணியாற்ற முடியாமல் போகின்றது. ஆனால் இளம் சமூகத்தைப் போன்று நாட்டின் வளர்ச்சிக்கு இவர்களால் பங்களிப்புச் செய்ய முடிவதில்லை. எனவே முதிர்ந்த வயதினர் நாட்டின் திறைசேரிக்கு ஒரு பாரமாகிவிடுகிறார்கள். இவர்கள் ஏற்கனவே நாட்டின் வளர்ச்சிக்குப் பெரும் பணியாற்றி இருப்பினும் அந்தச் சேவை மிக அர்ப்பணிப்புடன் செய்யப்பட்டிருந்தாலும் திறைசேரிக்கு பாரமாகி விடுகிறார்கள்.

## என்.எம். செய்தது

காலஞ்சென்ற டாக்டர் என்.எம். பெரேரா நிதி அமைச்சராகவும் இருந்த அதே சமயம் ஒரு சோஷலிசவாதியாகவும்,பொருளாதார நிபுணராகவும் இருந்தபடியால் அக்காலத்தில் நடைமுறையில் இருந்த ஊழியர் பங்களிப்பற்ற ஓய்வூதிய முறை நாட்டின் பொருளாதாரத்தை சரழிக்கின்றது என்பதை உணர்ந்து 1972 பெப்ரவரியில் ஓய்வூதியத் திட்டத்தை முற்றாகவே ஒழித்து விட்டார். சோஷலிசவாதியாக இருந்த அதே சமயம் அவர் தனது நாட்டை நேசித்தார். அரசியல் ரீதியில் தற்கொலைக்கொப்பான இந்தத் துணிச்சலான முடிவை எடுப்பதற்கு அவரது முன் உணர்வும்,பொருளாதார ஞானமும் காரணமாகவிருந்தன. பொதுச் சேவைகள் ஆணைக் குழுவினால் மேற்கொள்ளப்பட்ட நியமனப் பதவிகளும் கூட ஊழியர் சேமலாபநிதியின் கீழ் கொண்டு வரப்பட்டன.இத்திட்டத்தினால் பாதிக்கப்பட்டவர்களில் நானும் ஒருவன்.

எனக்குக் கிடைத்த வன பாது காவலர்பதவி பெப்ரவரி மாதம் வரை நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது ஊழியர் சேமலாப நிதித் திட்டத்தை அமுல் செய்வதற்கான சட்டதிட்டங்கள் உருவாக்கப்படும் வரை எனது நியமனம் தாமதிக்கப்பட்டது .

டாக்டர் என்.எம்.பெரேராவின் அத்திட்டம் 1972இல் இருந்து தொடர்ந்து அமுலில் இருந்திருந்தால் தற்போது ஓய்வு பெறும் ஊழியர்கள் அந்தத்திட்டத்தின் கீழ் ஓய்வூதியம் பெறுவார்கள். துரதிர்ஷ்டவசமாக அவர் அங்கம் வகித்த அரசாங்கமே அந்தத்திட்டத்துக்கு எதிராகச் செயல்பட்டது. பொருளாதாரரீதியில் பயன்தரவல்ல அத்திட்டத்துக்குப்பதிலாக அரசியல்லாபத்திற்கான குறுகிய நோக்கில் மீண்டும் ஓய்வூதியத் திட்டம் கொண்டு வரப்பட்டது.

டாக்டர் என்.எம். பெரேராவின் திட்டம் தொடர்ந்து செயல்பட்டிருநதால் இன்று நமது நாடு மிகவும் வளர்ச்சியடைந்திருக்கும். இன்று திறைசேரி ஓய்வூதியத்திற்காக சுமார் 7 பில்லியன் ரூபாவை செலவு செய்து வருகின்றது. இந்தப் பணம் முழுவதையும் நாட்டின் அபிவிருத்திக்காக செலவு செய்திருக்க முடியும்.

இன்றைய சுயநல அரசியல் வாதிகளை என. எம். பெரேராவின் அந்த சீரியத்திட்டத்தை உணர்கிறார்கள் இல்லை.

இன்றைய அரசு ஓய்வூதியத் திட்டத்தை ஒழித்து விட்டு டாக்டர் என். எம்.பெரேரா வின் ஊழியர் சேமலாபத் திட்டம் போன்ற ஒன்றை அறிமுகப்படுத்தும் துணிச்சலான நடவடிக்கையை எடுத்துள்ளது.

இப்போதைய திட்டத்தின்படி ஓய்வூதிய நிதிக்கு ஊழியரும் அரசும் பங்களிப்புச் செய்தாக வேண்டும் இந்த நிதி முதலீடு செய்யப்படும் அல்லது வருமானம் ஈட்டும் வகையில் வங்கியில் வைப்பிடப்படும்.

இத் திட்டத்தை குறை கூறுகிறவர்கள் அரசியலில் லாபம் பெற விரும்புகிறார்கள். இது பொருளாதார ரீதியில் தற்கொலையாகவே முடியும்.

சுகாதாரத்துறையில் இலவச சிகிச்சை முறையை ஒழிப்பதற்கும் டாக்டர் என். எம். பெரேரா ஒரு திட்டத்தை முன் வைத்தார். அரசாங்க ஆஸ்பத்திரிகளில் சிகிச்சை பெறுகிறவர்கள் 25 சத முத்திரை ஒன்றை சமர்ப்பிக்கவேண்டும் என்பதே அத்திட்டமாகும். அத்திட்டம் தொடர்ந்து செயல் பட்டிருப்பின் நாட்டின் அபிவிருத்திக்கு அது பெரும் பங்களிப்பாக இருந்திருக்கும்.

இவ்வாறு ஒரு சோஷலிஸ்டாக இருந்து கொண்டு இந் நாட்டு மக்களை சரியான ஒரு வளர்ச்சிப்பாதையில் அவர் இட்டுச் செல்ல முயன்றார் அவர் அதிகாரத்தை விட நாட்டையே முதன்மைப்படுத்தினார்.இன்று தம்மை தீவிர சோஷலிஸ்ட்டுகள் என்று கூறிக்கொள்பவர்கள் அந்த உயர்ந்த தலைவர்களிடம் இருந்து பாடம் படிக்க வேண்டும் .

இன்றைய புதிய ஓய்வூதியத் திட்டம் முதிய வயதில் மக்களை ஓட்டாண்டிகளாக்கி விட மாட்டாது. வளர்ச்சியடைந்த ஒரு நாட்டில் வாழும் நிலையை அது மக்களுக்கு ஏற்படுத்திக்கொடுக்கும் (பி)

# சார்க் நாடுகளின் கலாசார அமைச்சர்கள் மாநாடு

## கொழும்பில் 5தினங்கள்

(கொழும்பு)

சார்க் நாடுகளின் கலாசார அமைச்சர்கள் மர்நாடு எதிர்வரும் திங்கட்கிழமை தொடக்கம் வெள்ளிக்கிழமை வரை கொழும்பில் நடைபெறவுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை சார்க் நாடுகளின் கலாசார அமைச்சர்களின் செயலாளர்கள் கலந்து கொண்ட மாநாட்டில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கமைய இம்மாநாட்டை நடத்துவதற்கு, வெளிவிவகார அமைச்சும், மனிதவள அபிவிருத்தி அமைச்சும், கூட்டாக இணைந்து நடவடிக்கை எடுத்துள்ளன.

இம் மாநாட்டின் போது. இலங்கையில் கலாசார மத்திய நிலையமொன்றை அமைப்பது, தொல்பொருள் திணைக்களம், நூதனசாலை என்பவற்றை அபிவிருத்தி செய்வது, தெற்காசியப் பிராந்தியத்தின் கலாசாரப் பாரம்பரியங்களைப் பேணிப் பாதுகாப்பது, சார்க் நாடுகளுக்கிடையிலான நட்புறவை ஏற்படுத்துவது ஆகியன குறித்து ஆராயப்படவுள்ளன. (உ-8)

# பொதுமக்கள் தினம்

(கொழும்பு)

எதிர் வரும் 5ஆம் திகதி பொதுமக்கள் தினமாக அனுஷ்டிக்கப்படவுள்ளது. அலுவலகங்களில் வேலை செய்பவர்கள் அனைவரும் அன்றைய தினம் முழுவதும் கடமையில் இருக்கவேண்டுமென சுற்றறிக்கை மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

உள் நாட்டு அலுவலர்கள் அமைச்சர் அலுக் அலுவிகாரவின் ஆலேசனைக்கு ஏற்பவே இந்த சுற்றறிக்கை அனுப்பிவைக் கப்பட்டுள்ளது. (உ-8)

## ஆட்கடத்தல்,காணாமல் போதல்

# விசாரணை அறிக்கை விரைவில் வெளியீடு

(கொழும்பு)

வடக்கு-கிழக்குப்பகுதிகளில் இடம்பெற்ற ஆட்கடத்தல்கள், காணாமல்போதல் தொடர்பான முறைப்பாடுகள் குறித்தவிசாரணை அறிக்கை அடுத்தவாரம் பொலிஸாரால் வெளியிடப்படவுள்ளது.

இப்பகுதிகளில் மேற்குறிப்பிட்ட குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ளவென பொலிஸ்மாஅதிபரின் பணிப்பின் பேரில் 5 குழுக்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இவ் ஐந்து பொலிஸ் குழுவினரும் மேற்கொண்ட விசாரணைகளின் அடிப்படையில் 100 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இவை ஒவ்வொன்றும் தனித் தனியாக விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட பின்னரே விசாரணை அறிக்கை வெளியிடப்படும் என பிரதி பொலிஸ்மா அதிபர் கீர்த்தி ஜெய நாயக்கா தெரிவித்துள்ளார். (உ-8)





அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தனாவின் யாழ். வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று யாழ். அரச செயலகம், அரசஅரசசார்பற்ற நிறுவனங்கள், யாழ்.ஆஸ்பத்திரி மற்றும் முக்கிய சந்திகள் என்பவற்றில் கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன.

அத்துடன் வாகனங்களிலும் கறுப்புக் கொடிகள் கட்டப்பட்டிருந்தன. (படங்கள்: க.பவன்)

**சிறு விளம்பரம்**

**விற்பனைக்கு**

நல்ல நிலையில் டாக்டர் ஒருவரின் பாவனையிலுள்ள Chaly மோட்டார் சைக்கிளும் சிங்கர் தையல் மெசினும்(England) விற்பனைக்குண்டு. தொடர்பு- 70(34), கோவில் வீதி, யாழ்ப்பாணம். T.P No:222-5401 (6500)


## ரணில்-சந்திரிகா சந்திக்கவில்லை

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா பண்டாரநாயக்காவை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா நேற்று முன்தினம் சந்திக்கவிருந்த போதும் அச்சந்திப்பு இடம்பெறவில்லை.

ஜனாதிபதியும், பிரதமரும் நேற்று முன்தினம் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்துவதென ஏற்கனவே திட்டமிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (வ)

# புலிகளின் ஆயுதக்களைவு விவகாரப் பேச்சில் இருதரப்பும் ஆராய வேண்டும்

## பிரி.வெளியுறவு அமைச்சர் ஆலோசனை

(கொழும்பு)

சிறுவர்களை படைக்குச் சேர்ப்பதை எந்த வகையிலும் ஏற்றுக் கொள்ள முடியாது என்று பிரித்தானிய வெளியுறவு அலுவலக அமைச்சரும் அரசியல் வல்லுநருமான மைக் ஓ பிராய்ன் கடந்த புதன கிழமை கொழும்பு பண்டாரநாயக்கா மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் தெரிவித்துள்ளார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையைப் போன்றே பிரித்தானியாவும் பயங்கரவாதம் பற்றிய அனுபவங்களைக் கொண்டுள்ளது.

இன்று உலகில் பயங்கரவாதம் உச்ச நிலையில் இருந்து வருகின்றது.

ஈராக் அதிபர் சதாம்ஹுசைன் பயங்கர அழிவு ஆயுதங்களை வைத்திருக்கின்ற போதும் அவரின் நடத்தையால் அயல் நாடுகளுக்கு மட்டுமன்றி உலகத்திற்கே அச்சுறுத்தல் ஏற்பட்டிருக்கின்றது.

ஈராக் மக்களுக்கு ஜனநாயக உரிமையைப் பெற்றுக் கொடுப்பதற்கு சதாம் ஹுசைனை பதவியிலிருந்து விலக்க வேண்டும்.

இதேபோல், ஏனைய நாடுகளிலும் அணுஆயுதம் இருப்பினும் சதாம் போன்ற தீவிரவாத தலைவரிடம் இருக்கக்கூடாது.

உலகம் ஒன்றிணைந்து பயங்கரவாத அமைப்புக்களுக்கு உதவிகள் கிடைப்பதைத் தடுக்க வேண்டும்.

ஐ.நா. பாதுகாப்புச் சபையின் நிபந்தனைகளை உரிய முறையில் அமுல் படுத்துவதில் இலங்கையின் உதவியும் சர்வதேச நாடுகளுக்கு கிடைக்கும் என்பதில் எனக்கு நம்பிக்கை இருக்கின்றது.

விடுதலைப்புலிகளிடமுள்ள ஆயுதங்களைக் களைவது தொடர்பான விடயத்தை சமாதானப் பேச்சுவார்த்தையின்போது ஆராய்ந்து உடன்பாட்டுக்கு வருவதே சிறந்தது எனத்தெரிவித்துள்ளார். (உ-3)



# பொலிஸ் சேவைக்கு தமிழர்கள் எவரும் விண்ணப்பிக்கவில்லை

## உள்துறை அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கைப் பொலிஸ் சேவைக்கு ஆட்கள் சேர்க்கப்படுவதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்த போதும் தமிழர்கள் எவரும் அப்பதவிக்கு விண்ணப்பிக்கவில்லை. இதனால் பொலிஸ் சேவையில் தமிழர்களை சேர்த்துக் கொள்ள முடியவில்லை என்று உள்துறை அமைச்சர் ஜோண் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

பொலிஸ் சேவைக்கு ஆட்களை சேர்ப்பது தொடர்பாக ஆலோசனைக் கூட்டம் ஒன்று நேற்று முன்தினம் நடைபெற்ற போது இராதாகிருஷ்ணன் எம்.பியின் கேள்விக்குப் பதிலளிக்கும் போதே மேற்கண்டவாறு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

இளைப்பாறிய தமிழ் பொலிஸார் இப்பதவிகளுக்கு விண்ணப்பிக்க விரும்பினால் அவர்கள் விண்ணப்பிக்கலாம்.

போதியளவு தமிழ் பொலிஸார் கிடைக்கப் பெற்றதும் பொலிஸ் நிலையங்களில் தமிழில் வாக்குமூலமளிக்க ஏற்பாடுகள் செய்யப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார். (வ)

## விலைகள் வீழ்ச்சி விவசாயிகள் அதிர்ச்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டு சந்தைகளில் உள்ளூர் வெங்காயம், உருளைக் கிழங்கு ஆகியவற்றின் விலைகள் வெகுவாக சரிந்துள்ளதால் விவசாயிகள் அவற்றின் உற்பத்திக்குச் செலவு செய்த பணத்தை மீளப் பெறமுடியாத அவலநிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாக கவலை வெளியிடப்பட்டுள்ளது.

உப உணவு உற்பத்திப் பொருட்களான வெங்காயம், உருளைக் கிழங்கு ஆகியவை தற்போது அறுவடை செய்யப்பட்டு சந்தைப்படுத்தப்பட்டு வரும்போது தென்னிலங்கையிலிருந்து பம்பாய் வெங்காயமும், உருளைக்கிழங்கும் யாழ்ப்பாணத்திற்கு எடுத்துவரப்படுவதாலேயே குடாநாட்டு விவசாயிகள் பாரிய நட்டத்தை எதிர்நோக்கியுள்ளனர்.

வெங்காயம், உருளைக்கிழங்கு ஆகியவை அறுவடை செய்யும் காலத்தில் அவற்றை தனியார் வர்த்தகர்கள் தென்னிலங்கையில் இருந்து இறக்குமதி செய்வதைத் தடைசெய்ய வேண்டும் என விவசாய சங்கங்கள் கோரிக்கை விடுத்திருந்ததை அடுத்து அவற்றின் இறக்குமதி முன்னர் வெகுவாகக் கட்டுப்படுத்தப்பட்டிருந்தது.

குடாநாட்டில் உள்ள சந்தைகளில் உள்ளூர் வெங்காயம் கிலோ 25 ரூபா முதல் 35 ரூபாவரையும், உருளைக்கிழங்கு கிலோ 35 ரூபா முதல் 45 ரூபாவரையும் விற்பனை செய்யப்பட்டுவரும் அதேவேளை தென்னிலங்கையிலிருந்து யாழ்ப்பாணம் எடுத்துவரப்படும் பம்பாய் வெங்காயம் கிலோ 30 ரூபாவாகவும், உருளைக்கிழங்கு 50 ரூபாவாகவும் தற்போது விற்பனை செய்யப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (வ)

## கிரிக்கெட் போட்டி

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கலைக்கழகத்தினால் நடத்தப்பட்டு வரும் விக்ரம்-ராஜன்-கங்கு ஞாபகார்த்த 30 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் போட்டியில் நாளை கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் காலை 9 மணிக்கு கே.சி.சி விளையாட்டுக்கழகம் எதிர் யாழ் பல்கலைக்கழக அணியும்,

பி.ப 1.30 மணிக்கு ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகம் எதிர் ஜங்ஸ்ரார் விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளன. (உ)

## முன்பள்ளிச் சிறாருக்கு சத்துணவுத் திட்டம்

(நவக்கிரி)

ஆவரங்கால் மேற்கு இந்து இளைஞர் சனசமூக நிலைய விவேகானந்தா முன்பள்ளிச் சிறார்க்கு சத்துணவு வழங்கும் திட்டத்தை நிலையத்தின் தலைவர் செ.தவராஜசிங்கம் அண்மையில் ஆரம்பித்து வைத்தார்.

நிலைய நிதியைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ள இத்திட்டத்தினால் அங்கு பயிலும் 26 சிறார்கள் பயனடைந்து வருகின்றனர்.

காலக்கிரமத்தில் இத்திட்டத்திற்கு சர்வோதய உதவி கிடைக்கவுள்ளது. (உ-233)

## கருணாவுடனான சந்திப்புக் குறித்து கருத்துக் கூற மறுத்த ஒஸ்ரின்

(மட்டக்களப்பு)

அரசுப்பிரதிநிதிகளும், விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளுக்கும் இடையே நேற்று முன்தினம் வவுணைதீவு பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற பேச்சுவார்த்தை தொடர்பில் கருத்துக்கள் கூற பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ மறுத்துவிட்டார்.

காரசாரமாகவும், நீண்ட நேரமும் நடைபெற்ற இப்பேச்சு வார்த்தையின் பின் கருத்துக்கூற ஒஸ்ரின் மறுத்து விட்ட போதிலும்,

யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் ரொன்ட் பியுறு ஹொவ்டே, சிநேகபூர்வமாகவும், புரிந்துணர்வுடனும், அர்த்த புஷ்டியுடனும் இப்பேச்சு வார்த்தை நடைபெற்றதாகத் தெரிவித்துள்ளார். (வ)



## யுனிசெவ் நிறுவனம் உபகரண உதவிகள்

(யாழ்ப்பாணம்)

வறுமை காரணமாக ஆரம்பக் கல்வியை தொடரமுடியாது அவதியுறும் ஆரம்பப்பாடசாலை மாணவர்களுக்கு யுனிசெவ் நிறுவனம் பாடசாலை உபகரணங்களை வழங்கவுள்ளது.

யாழ். வலயக் கல்வி அலுவலகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள இவ் உபகரணங்கள் வழங்குவதற்கான மாணவர்கள் தெரிவு தற்போது இடம்பெற்று வருகின்றது. (உ-4)

## வணிகர் கழகப் பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வணிகர் கழகத்தின் 2003ஆம் ஆண்டுக்கான பொதுக்கூட்டமும் நிர்வாகசபைத் தெரிவும் இன்று சனிக்கிழமை பி.ப 2.00 மணிக்கு யாழ். வணிகர் கழகப் பணிமனையில் நடைபெறவுள்ளதால் சகல வர்த்தகர்களையும் பி.ப 2.00 மணியுடன் தமது வர்த்தக நிறுவனங்களைப் பூட்டி இப்பொதுக் கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளும்படி யாழ் வணிகர் கழகம் கேட்டுள்ளது. (உ)

## கொழும்பு பிரதான வீதிகள் பாவனைக்குத் தடை

(கொழும்பு)

கொழும்பு சுதந்திர சதுக்கப் பிரதேசத்தின் சில வீதிகள் இன்று முதல் எதிர்வரும் செவ்வாய் கிழமை வரையும் காலை 7 மணி முதல் 10 மணிவரையும் மூடப்பட்டிருக்குமென கொழும்பு போக்குவரத்துப் பொலிஸார் அறிவித்துள்ளனர்.

பெப்ரவரி 4 ஆம் திகதி கொண்டாடப்படவுள்ள சுதந்திரதின நிகழ்வுக்கு ஒத்திகைகள் நடைபெறவுள்ளதால் இவ்வீதிகள் மூடப்படவுள்ளன.

இதற்கமைய சுதந்திர வீதி, மேற்லைன் இடம், றீப்வீதி ஆகிய வீதிகளே மூடப்படவுள்ளன. (உ-8)

## நிர்வாகிகள் தெரிவு

(சுண்டுக்குளி)

நாவாந்துறை சென்நீக்கிலஸ் சனசமூக நிலையத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் கடந்த 22 ஆம் திகதி நிலைய மண்டபத்தில் சனசமூகநிலையங்களின் மேற்பார்வையாளர் ரி.சோமசுந்தரம் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வின்போது இடம்பெற்ற நிருவாக சபை தெரிவில் தலைவராக மைக்கேல் யேசுதாசன், செயலாளர் கனகராஜா வின்சன், பொருளாளர் பெ.இ.அருள்நாயகம் ஆகியோரும் நிர்வாக உறுப்பினர்களாக வி.அன்ரன், எஸ்.எஸ்.ஆசைத்துரை, ஏ.புறூன், எம்.மேக்லிஸ், ஏ.சுரேந்திரன், ஏ.எமில்பிரபாகரன், இ.வில்சன், ஜி.ஜெயதாஸ், ஏ.அஜித்குமார் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். (உ)

## உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு பதில் அனுப்புவதில் இழுத்தடிப்பு

(கொழும்பு)

தேசியகீதம் பற்றி முன்வைக்கப்பட்டுள்ள கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகள் தொடர்பாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் ஜோன் அமரதுங்கவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ள போதிலும் இது குறித்து எவ்வித பதிலும் கிடைக்கவில்லை என கலாசார மனிதவள அபிவிருத்தி அமைச்சர் க்ருணாசேன கொடித்துவக்கு தெரிவித்துள்ளார்.

நாட்டின் தேசிய கீதம் குறிப்பிட்ட சிலரது சொத்தாக மட்டும் இருக்கக்கூடாது. அனைத்து இன மக்களாலும் ஒன்றாக இசைக்கக் கூடிய வகையிலேயே அமைக்கப்பட வேண்டும்.

1988 ஆம் ஆண்டில் ஜனாதிபதியாக இருந்த ஜே.ஆர்.ஜயவர்த்தன தேசியகீதம், தேசியக்கொடி என்பன தொடர்பான சட்டங்களை அரசியல் அமைப்பு சட்டத்தில் இடம்பெறச் செய்தமை பாராட்டத்தக்கது எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (உ-8)

## செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்வலயத்துக்குட்பட்ட கணிதபாட ஆசிரியர்களுக்கான செயலமர்வு நாளை முதல் எதிர்வரும் 7ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை யாழ் மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது. (உ-4)



யாழ். உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தினால் நடத்தப்பட்ட உதைபந்தாட்டப் போட்டித் தொடரின் இறுதி நாள் நிகழ்வில் கலந்து கொண்ட சென் ஜோன்ஸ் கல்லூரியின் உப அதிபர் எஸ்.அமலசீலன், யாழ். உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தலைவர் கப்ரின் டி.ஏ.எம்.குணசிங்கம், இ.ஆனல்ட், எஸ்.ரி.கணநாதன், குமரையா ரவி ஆகியோரைப் படத்தில் காணலாம். (படம் : சுண்டிக்குளி நிருபர்)

# தாய்லாந்து - கம்போடிய உறவுகளில் விரிசல்

## ஒரு நடிகையின் கருத்து ஏற்படுத்தியுள்ள சிக்கல்

(நாம்பென்)
கம்போடியாவுடனான உறவுகளை தற்காலிகமாகத் துண்டிப்பதற்குத் தாய்லாந்து அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

எல்லைப் புறவழியாகத் தாய்லாந்திற்குள் சட்ட விரோதமாக கம்போடியர்கள் பிரவேசிப்பதைத் தடுப்பதற்கும், தாய்லாந்து அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

நேற்று முன்தினம் இரவு நெபன் பகுதியில் ஏற்பட்ட மோதல்களையடுத்தே இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக தாய்லாந்துப் பாதுகாப்பு அமைச்சர் கூறியுள்ளார்.

கம்போடியாவில் நடந்த தாய்லாந்து எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தையடுத்தே இந்த மோதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவங்களையடுத்து கம்போடியாவில் வசிக்கும் தாய்லாந்து வாசிகளைத் திருப்பி அழைப்பதற்குத் தாய்லாந்து அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

இதேவேளை கம்போடியாவில் ஏற்பட்ட மோதல் சம்பவம் குறித்துப் பூரண விளக்கமளிக்கப்பட வேண்டுமென தாய்லாந்துப் பிரதமர் கம்போடிய அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டுள்ளதுடன், இரு நாடுகளுக்கும் இடையிலான விமான போக்குவரத்துக்களை இடைநிறுத் தப்போவதாகவும் அவர் மேலும் எச்சரித்துள்ளார். (பி-2)

# கணனியில் நீண்ட நேரம் பணியாற்றினால் ஆபத்து

(வெலிங்டன்)
கம்பியூட்டர் முன்பு அமர்ந்து நீண்ட நேரம் பணியாற்றுவோருக்கு இரத்தம் உறைந்து கட்டியாகிவிடும் ஆபத்து உள்ளதாக மருத்துவ ஆய்வாளர்கள் எச்சரித்துள்ளனர்.

நியூசிலாந்துமருத்துவ ஆராய்ச்சி நிலையத்தின் இயக்குநர் ரிச்சர்ட் பீஸ்லி மற்றும் அவரது தலைமையிலான ஆய்வுக் குழுவினர், ஒரு மருத்துவ ஆய்வுப் பத்திரிகையில் இது தொடர்பாகக் கட்டுரை வெளியிட்டுள்ளனர்.

தினமும் 18மணி நேரம் கணனி முன்பு அமர்ந்து பணியாற்றிய 32வயது நபர் ஒருவரின் காலில் இரத்தக் குழாயில் இரத்தம் உறைந்து, பின்னர் நுரையீரலில் உள்ள இரத்தக் குழாயிலும் இரத்தம் உறைந்தது. இறக்கும் நிலைக்குச் சென்ற அவர் தீவிர சிகிச்சைக்குப் பிறகு உயிர் பிழைத்தார். இது போன்ற ஆபத்து மற்றவர்களுக்கும் ஏற்படலாம் என்று அக்கட்டுரையில் கூறப்பட்டுள்ளது.(பி)



புத்தாண்டைக் கொண்டாட வடகொரியாவிலிருந்து சொந்த ஊருக்குச் செல்ல சியோல்நகர எக்ஸ்பிரஸ் பஸ்ஸில் கூடிநிற்கும் தென்கொரிய மக்கள்.

## பழுப்புக் கரி நிறுவனத்தில் தீவிபத்து

(புதுடில்லி)
நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தில் முதலாவது அனல் மின் நிலையத்தில் ஏற்பட்ட தீவிபத்தினால் மின்சார உற்பத்தி தடைப்பட்டுள்ளது. இன்னும் நான்கு நாட்களுக்கு இது தொடர்ந்தும் நீடிக்கலாம் என்று தெரிகிறது. இந்த விபத்தினால் இரண்டு கோடி ரூபாய் அளவிற்கு நஷ்டம் ஏற்பட்டுளதாக அந்த நிறுவனத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (பி-9)

## போலி. பாக். பாஸ் போட்டுடன்

# 20 ஆப். பயங்கரவாதிகள் ஐரோப்பாவில் நடமாட்டம்

(லண்டன்)
போலி பாகிஸ்தான் பாஸ்போர்ட்டுடன் ஆப்கானிஸ்தான் பயங்கரவாதிகள் 20பேர் ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்றுள்ளதாகப் பத்திரிகைச செய்தி தெரிவிக்கிறது. ஜெர்மனி, பிரிட்டன், பிரான்ஸ் அதில் குறிப்பிடத்தக்க நாடுகளாகும்.

அல்கெய்டா பயங்கரவாத அமைப்பு பிரிட்டனை தனது அடுத்த பிரதான இலக்காகக் கொண்டுள்ளதாக கூறப்படுகிறது. இந்த நிலையில ஆப்கானிஸ்தான் பயங்கரவாதிகள் ஐரோப்பிய நாடுகள் பயணம் முக்கியத்துவம் பெறுகிறது என்றும் பத்திரிகைச் செய்தி தெரிவிக்கிறது. (பி)

## வாலிபர்களுக்கான பி.பி.ஸி புதிய ஒளிபரப்பு

(லண்டன்)
20முதல் 30வயதுவரையுள்ள வாலிபர்களுக்கான பதிய அலைவரிசையினை பி.பி.ஸி பெப்ரவரி 9ஆம்திகதி ஆரம்பிக்கவுள்ளது.

டிஜிட்டல்சாட்டிலைட் கேபிள் மூலம் இந்த அலைவரிசையில் நிகழ்சிச்சிகள் ஒளிபரப்புச் செய்யப்படும் என்றும்,

இது இரவு 7மணிமுதல் அதிகாலை 4மணிவரை ஒளிபரப்பப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (பி-2)

# கொலம்பியா ஓடம் ; இன்று பூமிக்கு திரும்புகிறது

(வாஷிங்டன்)
விண்வெளியில் சுற்றிக் கொண்டிருக்கும் சர்வதேச விண்-ஆய்வு நிலையத்தில் திட்டமிட்டபடி அனைத்து விஞ்ஞானச் சோதனைகளையும் வெற்றிகரமாக முடித்துக்கொண்டு விண்வெளி வீரர்கள் கொலம்பியா விண்வெளி ஓடத்தில் இன்று பூமிக்குத் திரும்புகின்றனர்.

ஏழு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுடன் ஆய்வு நிலையத்துக்குக் கொலம்பியா ஓடம் ஜனவரி 16ஆம் திகதி சென்றது. முழுக்க முழுக்க அறிவியல் சோதனைகளை விண்வெளியில் சுற்றும் ஆய்வு நிலையத்தில் நடத்துவதே அப் பயணத்தின் நோக்கமாகும் கடந்த மூன்று ஆண்டுகளில் இத்தகைய அறிவியல் ஆய்வுப் பயணம் மேற்கொள்ளது இதுவே முதன முறை. விண்வெளி வீரர்களுடன் பல்வேறு அய்வு நேக்கங்களுக்காக எறும்புகள், தேனீக்கள், பட்டுப்புழுக்கள், மீன், எலிகள், சிலந்திகள் உள்ளிட்ட பூச்சிகளும் கொலம்பியா ஓடத்தில் கொண்டு செல்லப்பட்டன.

விண்வெளியில் நடத்தப்பட்டுள்ள சோதனை முடிவுகளைப் பின்பற்றி பூமியில் விஞ்ஞானிகள் தொடர்சோதனைகளை மேற்கொள்வார்கள். (பி)

# வாஜ்பாய் அரசில் 8புதிய அமைச்சர்கள்

(புதுடில்லி)
இந்தியப் பிரதமர் வாஜ்பாய் தன்து அமைச்சரவையில் நேற்றுமுன்தினம் பெரும் மாற்றங்களைச் செய்தார்.


மூத்த அமைச்சர்கள் பிரமோத் மகாஜன், ஜனா கிருஷ்ணமூர்த்தி உட்பட 8பேர் அமைச்சரவையிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர். அருண்ஜேட்லி, சி.பி தாகுர் உட்பட 8பேர் அமைச்சரவையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

தமிழ்நாட்டைச் சேர்ந்த திருநாவுக்கரசருக்குத் தகவல்தொழில்நுட்பம் தொலைத்தொடர்பு வழங்கப்பட்டுள்ளது.

பிரமோத் மகாஜன், கட்சியின் பொதுச்செயலராகப் பொறுப்பேற்கிறார். கப்பல்துறை அமைச்சர் வி.பி கோயல், ரீடா வர்மா, ரமண்சிங், நிகில் சௌத்ரி ஆகியோர் கட்சிப் பணிக்குச் செல்கிறார்கள். உமாபாரதி. மத்தியப்பிரதேசத்துக்கும் வசுந்தரா ராஜே சிந்தியா ராஜஸ்தானுக்கும் அடுத்த தேர்தலில் முதல்வர் வேட்பாளர்களாக அனுப்பப்படுகின்றனர். அதனால் அவர்களும் அமைச்சரவையிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 6மாதங்களுக்கு முன் அமைச்சரவையிலிருந்து நீக்கப்பட்ட சி.பி. தாகுர், மீண்டும் அமைச்சரவையில் சேர்க்கப்பட்டுள்ளார். (பி)





மகாத்மா காந்தியின 55வது நினைவு நாளையொட்டி டெல்லியில் உள்ள அவரது சமாதியில் இந்தியக் குடியரசுத் தலைவர் அப்துல்கலாமும், பிரதமர் வாஜ்பாயும் அஞ்சலி செலுத்துவதைப் படத்தில் காண்கின்றீர்கள்.

# அணு இரகசியங்களை ரஷ்யாவுக்கு வழங்கியவர்

## மரணப்படுக்கையில் வாக்குமூலம்

(லண்டன்)
பிரிட்டனின் அணுகுண்டு இரகசியங்களை ஸ்டாலின் காலத்தில் சோவியத் யூனியனுக்கு வழங்கியவரான 91வயது அலன் நன் மே என்ற நபர் தற்பொழுது அவர் அப்படி செய்தமைக்கான காரணத்தை தனது மரணப்படுக்கையில இருந்தபடி வெளியிட்டிருக்கிறார்.

கேம்பிறிட்ஷயரிலுள்ள அவரது இல்லத்தில் மெத்தையின் மீது சாய்ந்திருந்தபடி, மே தனது மகன். மருமகள், பேர்த்தி ஆகியவர்களை படுக்கைக்கருகில் அழைத்தார். தாம் விரைவில் மரணமாகப் போவது தெரியும் என்றும், தனது வாழ்வின் இறுதிச் செயல் என்ற முறையில் ஏன் ஸ்டானிக்கு தனது நாட்டின் அணு இரகசியங்களை வெளியிட்டு துரோகம் செய்தார் என்பதை வெளியிடவிரும்புவதாகவும் அவர்களிடம் தெரிவித்தார்.

அவர் கூறியதில் புதியவை ஒன்றும் இருக்கவில்லைதான், ஏற்கனவே குடும்பத்தவர்களால் வெளியிடப்பட்டவைதான் என்றாலும், இம்முறை தமது குடும்பத்தவர்களும் உலகமும் தாம் அப்படிச் செய்தமைக்கான காரணத்தை அறிய வேண்டும் என விரும்புவதாக அவர் கூறினார்.

அலன் நன் மே, பிரிட்டிஷ் அணு ஆயுத இரகசியங்களை சோவியத் யூனியனுக்குக் காட்டிக் கொடுத்தார் என்ற விடயம் 1949ஆம் ஆண்டு வெளியாகி மேற்குலகத்தைப் பெரும் கலக்குக் கலக்கியிருந்தது.

ஒலி நாடாவில் பதிவான அவரது வாக்குமூலம் முடிவடைவதற்கு ஏறத்தாழ ஒன்றரை மணிநேரம் பிடித்ததாக அவரது குடும்பத்தினர் கூறினார்கள்.

இந்த வாக்கு மூலத்தை கிறிஸ்மஸ்ஸிற்கு முன்பு பதிவு செய்ததன் பின்னர் ஜனவரி 12ஆம் திகதி அவர் மரணத்தைத் தழுவினார்.

ரஷ்யாவுக்கு பிரிட்டிஷ் அணுரகசியங்களை வெளியிட்டதை 1949ஆம் ஆண்டு அலன் ஒப்புக் கொண்டபோது பத்திரிகைகளில் அச் செய்தி மிகப் பெரிதாகவும். பரபரப்போடும் வெளியிடப்பட்டது. பணத்துக்காகவே அவர் அவ்வாறு செய்திருந்தார் என்று பத்திரிகைகளில் செய்தி வெளியாகியது. ஐரோப்பாவில் நேசநாட்டுப்படைகள் வெற்றிகண்டிருந்த வேளையில் இந்தச் செய்தி வெள்ளியாகியிருந்தது.

சோவியத் ஒற்றராக அவர் எவ்வளவுகாலம் இருந்துவந்தார் என்பதை மறைக்கவும், பிரிட்டனில் எந்த அளவு ரஷ்ய உளவு வேலைகள் இடம் பெற்றிருந்தன என்பதை மறைக்கவுமே தாம் அப்போது அணு இரகசியங்களை வெளியிட்டதை ஒப்புக் கொண்டதாக அவர் இப்பொழுது கூறியுள்ளார்.

பகிரங்கமான விசாரணை யொனறைத் தவிர்த்து தனது மதிப்பைப் பாதுகாத்துக் கொள்ளலாம் என்றும் விஞ்ஞான வேலைகளைத் தொடரலாம் என்றும் தாம் கருதியதாக அவர் தெரிவித்துள்ளார்.

குற்றச்சாட்டின் ஒரு பகுதியை ஒப்புக் கொண்டதாகவும் அவ்வாறு செய்த போது வேறு எவரையும் காட்டிக் கொடுக்கவில்லையென்றும் அவர் கூறியுள்ளார்.

1941ஆம் ஆண்டிலிருந்தே அலன் ரஷ்யருக்கு இரகசியங்களைக் கொடுத்து வந்துள்ளார். பிரிட்டிஷ் கம்யூனிஸ்ட் கட்சியின் ஆயுள் உறுப்பிரனாகவிருந்த அவர் ஹிட்லரின் இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்ட ரஷ்ய அணு ஆயுதபலத்தில் ஏனைய நாடுகளுக்கும் பின்னடைந்து விடக்கூடாதென்றும் அவர்கருதியுள்ளார்.

காட்டிக்கொடுத்த குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து 10வருடக் கடுழியச்சிறைத் தண்டனை விதிக்கப்பட்டிருந்தது. ஆனால் 6வருடங்கள் மட்டுமே சிறைத் தண்டனையை அனுபவித்தார். 1961இல் கானாவில் ஒரு தொழிலில் ஈடுபட்டார். 1978ல் ஓய்வுபெற்று தமது ஊருக்குத்திரும்பினார். (பி)

# மா விலை அதிகரிப்புக்கும் —சந்திரிகாவுக்கும் தொடர்புண்டாம்— குற்றம்சாட்டுகிறார் பிரதிநிதியமைச்சர்

(கொழும்பு)

கோதுமை மாவின் விலை அதிகரிப்பிற்கு, ஜனாதிபதி பிறிமா நிறுவனத்துடன் செய்துகொண்ட ஒப்பந்தமே காரணம் என்று கிராமிய பொருளாதார அபிவிருத்தி அமைச்சரும பிரதி நிதியமைச்சருமான பந்துல குணவர்த்தனா குற்றம் சாட்டியுள்ளார்.

கோதுமை மா மீது "வற்" வரி விதிக்கப்படவில்லை.

கோதுமை மாவின் விலை உலக வர்த்தக விலை அதிகரிப்பிறகு ஏற்ப அதிகரிக்கப்படும் என்ற உடன்படிக்கையில் ஜனாதிபதி கைச்சாத்திட்டுள்ளார்.

அமைச்சரவை தலைவராகவும் ஜனாதிபதி உள்ளார். இதுவே விலை ஏற்றத்திற்கு காரணமாகும்.

இதேபோல், தேங்காய் விலையை குறைக்க கேரளாவிலிருந்து தேங்காயை இறக்குமதி செய்ய முடியும இதனால் நாட்டில் உற்பத்தி அதிகரிக்காதபோதும் உரத்திற்கான பணத்தைக் கூட செலவிட முடியாத நிலை ஏற்படும் என்றும் பந்துல தெரிவித்துள்ளார். (உ-3)

# விடுதலைப்புலிகள் கோருவது சுயாட்சியே; தனிநாட்டை அல்ல

## அமைச்சர் ராஜித அவையில் உரை

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகள் சுயாட்சியையே கோரிநிற்கின்றனர். தனிநாட்டை அல்ல என காணி அமைச்சர் ராஜித சேனரட்ன நேற்றுப் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அண்மையில் உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆற்றிய உரை தொடர்பான விவாதம் நேற்று 2வது நாளாகவும் பாராளுமன்றத்தில் இடம்பெற்றது.

இவ்விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே காணி அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அமைச்சர் அங்கு தொடர்ந்தும் பேசுகையில்,

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையில் ஏற்பட்ட அரிய சமாதானச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தியே போர்நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது.

தமிழீழவிடுதலைப்புலிகளின் சுயாட்சிக் கோரிக்கை தொடர்பாக இனிவரும்' காலங்களில் நடைபெறவுள்ள பேச்சுக்களின் போது கலந்துரையாடப்படவுள்ளது.

சமஷ்டி முறையிலான ஆட்சி முறையினை முதலில் பிரேரித்தாவர் அமரர் எஸ். டபிள்யூ. ஆர். டீ. பண்டாரநாயக்கா தான்.

இறுதித்தீர்வு கிடைக்கும் வரை ஆயுதங்களை கீழே வைக்கப்போவதில்லை என தமிழீழ விடுதலைப்புலிகள் கூறிய போதிலும், அவர்களை பேச்சுவார்த்தை மேசைக்கு அரசு அழைத்துள்ளமை ஒரு வெற்றி என்றார்.

தென்மாகாணத்தின் அரசியல் நிலைவரம் குறித்து கருத்து தெரிவிக்கையில், பொதுஜன ஐக்கியமுன்னணி, மக்கள் விடுதலை முன்னணியுடன் கூட்டுச் சேர்ந்து பொதுத தேர்தலில் போட்டியிட்டாலும், அல்லது அவ் விரு கட்சிகளும் தனித்தனியே .போட்டியிட்டாலும் தமது கட்சி எந்தவொரு சமயத்திலும் பொதுத் தேர்தலை எதிர்கொள்ளத் தயார் என்று குறிப்பிட்டார்.

இவ்விவாத்தில் கலந்து கொண்ட பொதுஜன ஐக்கிய முன்னணி பாராளுமன்ற உறுப்பினர் அனுராபண்டாரநாயக்கா, தமிழீழ விடுதலைப் புலிகள் மீது எந்தவொரு அரசோ அன்றி சர்வதேசமோ நம்பிக்கை வைக்க முடியாது.

அவர்கள் நடந்த கொள்ளும் முறை இதனை தெளிவுபடுத்துகிறது.

விடுதலைப்புலிகள் சர்வதேச அமைப்புக்களுக்கு பொய் உறுதி கூறிக்கொண்டு, தமது படைகளில் சிறுவர்களை சேர்த்து வருகின்றனர் அதனை அரசு தடுக்கவில்லை.

அரசாங்கத்தாலும், புலிகளினாலும் செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்த மீறல்களை ஜனாதிபதி அனைத்து சந்தர்ப்பங்களிலும் கவனித்துக் கொண்டிருப்பார் என எதிர்பார்க்க முடியாது என்று தெரிவித்தார். (உ-8)

# உலகக் கோப்பை இந்திய அணிக்கே!

## வீரேந்திர ஷேவக் வீரப்பிரதாய

(புதுடில்லி)

நியூஸிலாந்தில் ஏற்பட்ட தோல்வியை மறந்துவிடுங்கள். உலகக் கோப்பையை வெல்லப் போவது இந்திய அணிதான என்று இந்திய அணியின் அதிரடி ஆட்டக்காரர் வீரேந்திர ஷேவக் கூறியுள்ளார்.

தலைநகர் டெல்லியில் விளம்பர ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திடும் நிகழ்ச்சிக்குப் பிறகு செய்தியாளர்களிடம் பேசிய வீரேந்திர ஷேவக் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில், நியூஸிலாந்திற்கு மாறாக இந்திய அணி உலகக் கோப்பையில் அபாரமாக ஆடி வெற்றி பெறும்,

"வெற்றி பெற்றே தீருவது என்கிற ஒரே இலக்குடன் களமிறங்குகின்றோம். அணியில் உள்ள ஒவ்வொரு வீரும முழு நம்பிக்கையுடன் இருக்கின்றோம். நிச்சயம் வெற்றி பெறுவோம். இந்த உலகக் கோப்பையை வெல்லப் போகும் சாத்தியக் கூறு இந்திய அணிக்குத்தான் அதிகமாக உள்ளது" என்று ஷேவக் கூறினார்.

எப்படிப்பட்ட ஆட்டக்களத்திலும் என்னால் சிறப்பாக ஆட முடியும் என்ற நம்பிக்கையுடன் பேசிய வீரேந்திர ஷேவக், தனது இயற்கையான அதிரடி தாக்குதல் ஆட்டதில் தான் தொடர்ந்து ஆடப்போவதாக கூறினார்.

மேலும், எப்படிப்பட்ட ஆட்டக்களமாக இருந்தாலும் வேகப்பந்து வீச்சாளர்களை விட சிறப்பாக ஆடமுடியும் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது. "ஷோயிப் அக்தார் உட்பட எல்லா வேகப்பந்து வீச்சாளர்களையும் என்னால் எதிர்கொள்ள முடியும். யாரைப்பற்றியும் எனக்கு அச்சம் கிடையாது. ஏனென்றால் நான் பந்தைத்தான் ஆடப்போகின்றேனே தவிர, பந்து வீச்சாளர் எனக்கு பொருட்டல்ல"


துவக்க ஆட்டக்காரராக மட்டுமல்ல, எந்த நிலையிலும் களமிறங்கி யாரோடு வேண்டுமானாலும் இணைந்து சிறப்பாக ஆடமுடியும் எந்த நிலையில் இறங்கி ஆடுகிறோம் என்பது அல்ல முக்கியம். ரன்களைக் குவிக்க வேண்டும். அதுதான் இலக்கு என்றார்.


நியூஸிலாந்தில் ஏற்பட்ட தோல்வி குறித்து கருத்து கூறுகையில் நியூஸீலாந்து ஆட்டங்களங்களில் இருந்த எதிர்பாராத பந்து எழுச்சியே இந்திய அணியின் மோசமான ஆட்டத திற்குக் காரணம். இந்திய பேட்ஸ் மேன்கள் மட்டுமல்ல, நீயூஸிலாந்து ஆட்டக்காரர்களும் மோசமாகத் .தான் ஆடினார்.

நியூஸீலாந்து ஆட்டக்களங்களைப் போல் அல்லாமல், தென் ஆபிரிக்க ஆட்டக்களங்களில் பந்து சீராக மேலேழுப்பி வரும் எனவே நியூஸிலாந்தில் சந்தித்த பிரச்சினையை உலகக் கோப்பையில் இந்திய அணியினர் சந்திக்கப் போவதில்லை என்று கூறினார். (உ)

அன்பு மாணவ மணிகளே!
உங்கள் அபிமான
வலம்புரியில்
VALAMPURI
உங்கள் பிரதிகளுக்கு இன்றே முந்துங்கள்
ஒவ்வொரு புதன்கிழமைகளிலும் 5ஆம் தர புலமைப் பரீட்சைக்கான மாதிரி வினாத்தாள் வெளிவருகின்றது.
மாணவர்களால் எழுதி அனுப்பப்படும் விடைகளில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்றவர்களின் பெயர், பாடசாலையின் பெயர் என்பன வலம்புரியில் வெளிவரும்.
உங்கள் விடைகளை அனுப்பி வைக்க வேண்டிய முகவரி
கல்விப் பகுதி
வலம்புரி
15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.


நேற்று முன்தினம் யாழ். மத்திய கல்லூரியில் இடம்பெற்ற சர்வமத மாநாட்டில் பிடிக்கப்பட்ட படங்கள்











## உயர் பாதுகாப்பு வலயம் குறித்த

# பொதுமக்கள் கருத்தை அறிய நம்பியார் நாளை யாழ். வருகிறார்.

(கொழும்பு)

**இந்தியாவின் ஓய்வு பெற்ற மூத்த இராணுவ அதிகாரி லெப்டினனட் ஜெனரல் சதீஸ் நம்பியார் நாளை ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் வந்து உயர் பாதுகாப்பு வலய விவகாரம் குறித்து பொதுமக்களின் கருத்துக்களை கேட்டறிவார் என கொழும்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.**



சதீஸ் நம்பியார்

யாழ். குடாநாட்டில் சர்ச்சைக் குரிய விடயமாகியுள்ள உயர் பாதுகாப்பு வலயங்களில் மக்களை மீளக்குடியமர வழி செய்யும் விதத்தில் எவ்வாறு மாற்றியமைக்கலாம் என்பது குறித்து ஆலோசனை வழங்கும்படி நம்பியாரை இலங்கை அரசு கேட்டுக் கொண்டிருப்பதற் கிணங்க குடாநாட்டில் உள்ள உயர் பாதுகாப்பு வலயங்களை இவர் நாளை நேரில் பார்வையிடவுள்ளார்.

அத்துடன், இது விவகாரம் குறித்து குடாநாட்டு இராணுவத் தளபதிகள் பொதுமக்கள் பிரதிநிதிகள் ஆகியோரின் கருத்துக்களையும் கேட்டறிவார்.

இதேவேளை ஜெனரல் நம்பியார் உயர்பாதுகாப்பு வலயம் குறித்து கடந்த டிசம்பர் மாதம் அரசிடம் கையளித்துள்ள பூர்வாங்க அறிக்கையில்,

உயர்பாதுகாப்பு வலயங்கள் மாற்றியமைக்கப்பட்டு இடம் பெயர்ந்த மக்கள் அப்பகுதிகளில் மீளக் குடியமர்த்தப்படுவதாயின் விடுதலைப் புலிகளின் கனரக ஆயுதங்கள் மூன்றாம் தரப்பு நடுநிலைமையாளரிடம் ஒப்படைக்கப்படவேண்டும்.

விடுதலைப் புலிகளின் முன்னணிப் பாதுகாப்பு அரண்கள் பின்நகர்த்தப்பட வேண்டும் என்று கடும் நிபந்தனைகளை விதித்துள்ளார்.

இது குறித்து விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன்பாலசிங்கம், லண்டன் தமிழ் கார்டியன் பத்திரிகைக்கு அளித்த பேட்டியில்,

இப்படியான யோசனைகளையும் நிபந்தனைகளையும் பரிசீலனைக்கு எடுக்காமலே நாம் நிராகரித்து விடுவோம் எனவும்,

விடுதலைப் புலிப்போர் அணிகளின் கேந்திர இராணுவ சமபல நிலைக்குப் பாதகமாக அமையும் எவரினதும், எந்தவிதமான பரிந்துரைகளையும் விடுதலைப் புலிகள் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை எனவும் உறுதிப்படத் தெரிவித்து விட்டார்.

இது இவ்வாறிருக்க சதீஸ் நம்பியாரின் அறிக்கை குடாநாட்டு மக்கள் மத்தியில் அதிருப்தியையும் எரிச்சலையும் ஊட்டியிருப்பதுடன், யாழ் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் இது குறித்து கண்டன அறிக்கையை வெளியிட்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது. (உ)

# வவுனியா மாவட்ட அபிவிருத்திக்கு 2002இல 2கோடி 40 இலட்சம் செலவு

## அமைச்சர் நூர்டீன் மசூர் தெரிவிப்பு

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தின் அபிவிருத்திக்கென கடந்த ஆண்டு 2 கோடி 40 இலட்சம் ரூபா செலவிடப்பட்டதாக வன்னிப்புனர்வாழ்வு அமைச்சர் நூர்டீன் மசூர் தெரிவிதுள்ளார்.

கடந்தகாலத்தில் இடம்பெற்ற யுத்தம் காரணமாக வவுனியா மாவட்டத்தைவிட்டு இடம்பெயாந்த மக்களை மீளக்குடிமர்த்துவதற்கே இதில் பெருமளவு நிதி செலவிடப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் இடம் பெயர்ந்த சுமார் 600 குடும்பங்களை மீளக் குடியமர்த்த வன்னிப் புனர்வாழ்வு அமைச்சு 13 மில்லியன் ரூபாவையும் வீதிப்போக்குவரத்துகளை புனரமைப்பதற்கு 34 இலட்சம் ரூபாவும், விளையாட்டுத்துறைக்கென ஒரு இலட்சம் ரூபாவும் ஏனைய அத்தியாவசிய தேவைகளுக்காக 20 இலட்சம் ரூபாவும், வணக்கத் தலங்களை புனரமைப்பதற்கு 6 இலட்சம் ரூபாவும் செலவிடப்பட்டதாக அமைச்சின் இணைப்பாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை கடந்த ஆண்டைவிட இவ்வாண்டு அதிகமான புனரமைப்பு வேலைகள் வன்னி மாவட்டத்தில் நடைபெறவுள்ளதுடன், மீள்குடியமரும் மக்களின் தொகையும் அதிகரிக்கப்படவிருப்பதால் இவ்வாண்டில் அதிக நிதி



தேவைப்படும் எனவும் அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார். (உ-8)

# மலேரியா மேலும் பரவும் சாத்தியம்

(கொழும்பு)

வடபகுதியில் மலேரியாக் காய்ச்சல் பரவும் அபாயம் நிலவுதாக வவுனியா பிரதேச மலேரியாத் தடுப்புப்பிரிவு அறிவித்துள்ளது.

இது குறித்து வவுனியா மலேரியாத் தடுப்புப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில்,

இராணுவக்கட்டுப்பாடற்ற பகுதியில் போதிய வசதியின்மை காரணமாக சுகாதார சேவைகளை விஸ்தரிக்க முடியாதுள்ளது.

யாழ். கண்டி வீதி திறக்கப்பட்டதைத் தொடர்ந்து வன்னிப் பிரதேசங்களில் இருந்தும், நாட்டின் ஏனைய பகுதிகளில் இருந்தும் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமரவென அதிகமான மக்கள் யாழ் குடாநாட்டிற்கு செல்கின்றனர்.

இதனால், மலேரியா பரவும் சாத்தியம் அதிகரித்துள்ளது.

அண்மையில் மலேரியா தடுப்பு பிரிவினால் மேற்கொள்ளப் பட்ட ஆய்வுகளின் படி,மலேரியாக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டவர்களில் கூடுதலானோர் வெளிமாவட்டங்களில் இருந்து வந்தவர்கள் எனத் தெரிய வந்துள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-8)

## நிதி ஒதுக்கு

(நவக்கிரி)

கோப்பாய்ப் பிரதேச செயலர் பிரிவில் மேற்கொள்ளப்படவுள்ள சமுர்த்தி வேலைத்திட்டங்களுக்கென ஒரு இலட்சத்து 85 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. (உ-233)

# குடாநாட்டுக் குடிநீரில் மலத்தொற்று நீர் மாதிரிகள் புலப்படுத்துகின்றன.

(சுதுமலை)

யாழ். குடாநாட்டில் குடிநீரில் மலத்தொற்று அவதானிக்கப்பட்டுள்ளது.

யாழ். சுகாதாரத்திணைக்கள பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் இம்மாதம் யாழ். நகரில் உள்ள பிரதான உணவகங்கள், குளிர்பான நிலையங்கள் மற்றும் யாழ். போதனாவைத்தியசாலை என்பவற்றின் குடிநீர் மாதிரிகள் பெறப்பட்டு கொழும்பு மருத்துவ ஆராய்ச்சி நிலையத் திற்குப் பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டன.

மேற்படி நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சி முடிவுகள் குடிநீரில் மலம் கலந்திருப்பதை உறுதி செய்துள்ளன.

சரியான முறையில் நீரைச் சுத்தம் செய்யாமை, காலத்திற்குக் காலம் குளோரின் இடப்படாமை போன்றவையே இதற்குக் காரணம் எனவும் இதனால் இலகுவில் குடல் சார் தொற்று நோய்கள் பரவக்கூடிய வாய்ப்பு உள்ளதாகவும் சம்பந்தப்பட்டவர்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (உ-252)

## முதலாம் ஆண்டு நிறைவு விழா

(சுதுமலை)

சாவல்கட்டுப் பகுதியில் உள்ள தாரகா விதவைகளிற்கான மலர்வு மையத்தின் முதலாம் ஆண்டு நிறைவு விழா இன்று சனிக்கிழமை பி.ப. 4மணிக்கு தலைவர் திருமதி ச.சைலா தலைமையில் சாவல்கட்டு மகாத்மா சனசமூக நிலைய விளையாட்டுக் கழகமைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு, பிரதமவிருந்தினராக வலி.தென்மேற்கு பிரதேச செயலக பதில் பிரதேச செயலாளர் ச. செல்வராசாவும் கௌரவ விருந்தினராக தமிழீழ விடுதலைப்புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி. இளம்பரிதியும் கலந்து கொள்ளவுள்ளனர். (உ-252)

## தெல்லிப்பழை பிரதேச செயலக

# விளையாட்டுப் போட்டி திங்களன்று ஆரம்பம்

(ஏழாலை)

தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான விளையாட்டு போட்டிகள் எதிர்வரும் 3திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளன.

இவ் வருடத்துக்கான விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றுவதற்காக தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் 16 விளையாட்டுக் கழகங்கள் பதிவு செய்துள்ளதாகவும் அவ் விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான போட்டி அட்டவணைகள் தயாரித்து வழங்கப்பட்டு மல்லாகம் ஸ்ரீ பாஸ்கரன் விளையாட்டு அரங்கில் போட்டிகள் நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் விளையாட்டு அலுவலரால் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-12)


# பதவி வெற்றிடம்

## பிரதேச செய்தியாளர்கள் (ஆண்கள்)

**பின்வரும் பிரதேசங்களில் வெற்றிடங்களை நிரப்பவும், மேலதிகமாகவும் செய்தியாளர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.**

| | |
|---|---|
| நீராவியடி | தெல்லிப்பழை |
| கொக்குவில் - கிழக்கு | அளவெட்டி |
| கொக்குவில் - மேற்கு | பண்டத்தரிப்பு |
| கோண்டாவில் - கிழக்கு | மாதகல் |
| கோண்டாவில் - மேற்கு | இளவாலை |
| உரும்பிராய் | சில்லாலை |
| ஊரெழு | நாவாந்துறை |
| அச்செழு | கொட்டடி |
| புன்னாலைக்கட்டுவன்-தெற்கு | பாசையூர் |
| புன்னாலைக்கட்டுவன்-வடக்கு | கொழும்புத்துறை |
| தாவடி | அரியாலை |
| இணுவில் | நல்லூர் |
| மருதனார்மடம் | சுன்னாகம் |
| குருநகர் | |

***தகைமை : க.பொ. த. (சாதாரணம்) சித்தி***

தகுதியும், ஆர்வமும் உடையவர்கள் முழுப்பெயர், நிரந்தர முகவரி, தற்காலிக முகவரி, பிறந்த திகதி, தே.அ.அ.இல, கி.சே.பிரிவு, பி.சே.பிரிவு, குடியியல் தகைமை, கல்வித்தகைமை, தொழில் புரிபவராயின் தொழிலின் தன்மை, தொழில் புரியும் திணைக்களம், இடம் மேலதிக தகைமை ஆகியன உள்ளிட்டதாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை

**ஆளணி முகாமையாளர்**<br>**வலம்புரி**<br>**15, வெள்ளாந்தெரு,**<br>**யாழ்ப்பாணம்.**

எனும் முகவரிக்கு 10.02.2003ற்கு முன்னதாக அனுப்பி வைக்கவும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "பிரதேச செய்தியாளர்" பதவிக்கான விண்ணப்பம் எனத்தவறாது குறிப்பிடவும்.

வலம்புரி ஆளணி முகாமையாளர்

# அகத்தினை நெகிழவைத்த அழைப்பினை ஏற்று

# முதுமை பாராது நானும் லண்டன் சென்றேன்

## அக்கரைச் சீமையின் அனுபவங்கள் 10

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிப் பழைய மாணவர் சங்கத்தின் ( லண்டன் கிளை) "கலையரசி" கலை விழாவினை அடுத்துப் பார்வையாளனாக நான் கலந்து கொண்டது யாழ் கம்பர்மலை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் பழைய மாணவர் சங்கம் (ஐக்கியராச்சியம்) 3.8.2002 அன்று வழங்கிய 'பூபாளராகங்கள்' நிகழ்ச்சியாகும். ஹெய்ஸ் (Hayes) என்ற இடத்தில் பெக்தியேட்டரில் (Beck Theatre) அது மிகப் பெருமெடுப்பில் விமரிசையாக இடம் பெற்றது. அவைக் காற்று கழகத்தின் நிறுவுநரும் இயக்குநருமான க.பாலேந்திராவின் அழைப்பின் பேரில் இந்நிகழ்ச்சியைக் காணும் வாய்ப்புக் கிடைத்தது.

### பூபாள ராகங்கள்

இந்நிகழ்ச்சியிலே நாட்டியக் கலையரங்கம் (ஸ்ரீமதி ராகினி ராஜகோபால் அவர்களின் நாட்டியாலயா வழங்கியது) கம்பவாரிதி இ.ஜெயராஜ் தலைமையில் ஸ்ரீபிரசாந்தன், சட்டத்தரணி சு.ஸ்ரீகாந்தலிங்கம் திருமதி மாதவி சிவலீலன் ஆகியோர் கலந்து கொண்ட பட்டிமண்டபம் ('இல்லறத் தலைமைக்குப் பெரிதும் பொருத்தமானவர்கள் ஆண்களே- பெண்களே', கானமழை (லண்டன் புகழ் துஷி, தனு சகோதரிகளும் நண்பர்களும்), க.பாலேந்திராவின் நெறியாள்கையில் வேருக்குள் பெய்யும் மழை (செழியன் எழுதியது) காத்திருப்பு (ச.வாசுதேவன் எழுதியது) நாடகங்கள் ஆகியன இடம் பெற்றன. 'கலையரசி' நிகழ்வின் பின்பு மீண்டும் யாழ்ப்பாணத்தில் கலை அரங்கொன்றிலே பார்வையாளனாய் அமர்ந்து இரசிக்கும் உணர்வினை இந் நிகழ்ச்சிகள் ஏற்படுத்தின. விழா நினைவாகச் சிறந்த தரமான மலர் ஒன்றும் வெளியிடப்பட்டது.

யாழ்ப்பாணத்தின் சிறிய தொரு பாடசாலை,பெருந்தேசியக் கல்லூரிகளுக்கு இணையாக சில அம்சங்கள் உயர்வாகவும் தனது தடங்களைக் கடல் கடந்த மாநகர் ஒன்றிலே ஆழமாகவும் அழுத்தமாகவும் பதித்தது என்றால் அதன் மூலவர் அப்பாடசாலையின் பழைய மாணவரான இளைஞர் ஒருவரே (துரதிருஷ்டவசமாக அவர் பெயர் நினைவில் இல்லை) என்பதை அறிந்து பெருமையும் மகிழ்ச்சியும் அடைந்தேன. எமதுபண்பாடுகளையும் கலைகளையும் ஆன் மீக நெறிகளையும் தவறாது சுமந்து சென்று உலகமெல்லாம் பரவும் வகை செய்திடும் எம் இளம்பரம்பரையினரின் ஆற்றல்களுக்கும் சாதனைகளுக்கும் தாம் தலைவணங்கியேயாக வேண்டும்.

### இலக்கியக் கருவூலம் வெளியீட்டு விழா

'மனம் உண்டானால் இடம் உண்டு' என்பது அர்த்தமுள்ள ஒரு பழமொழி.எனது இலக்கியக் கருவூலம் நூலினை வெளியிட மனம் வைத்தவர் நான் முன்பே குறிப்பிட்டுள்ள பாலசிங்கம். நான் லண்டன் கொண்டு சென்றவை அந்த நூலின் இரண்டு பிரதிகளே. ஆனால் 'நாமிருக்கப் பயம் ஏன்?'என்று அபயம் அளித்து ஓரிரு நாள்களிலேயே இலங்கை யிலிருந்து வரும் பத்திரிகைகளோடு சேர்த்து அதன் நூறு பிரதிகளை விமான மூலம் அவர் எடுப்பித்தது இன்று நினைத்தாலும் பெரு வியப்பையே அளிக்கின்றது. 'நினைத்ததை முடிப்பவன் (திரைப் படப் பாடலின் )என்ற சொற்றொடருக்குப் பொருத்தமானவர் பாலசிங்கமே என்பதை அவர் செயல் நிரூபித்து விட்டது.

இலக்கியகருவூலம் 17.8.2002 இல் ஸ்ரீகனகதுர்க்கா அம்மன் ஆலய மண்டபத்தில் (ஈலிங் ,லண்டன்) லண்டன் மேற்கில் உள்ள தமிழ்ப் பாடசாலையின் தமிழாசிரியரான மூத்த அறிஞரின் (இவர் பெயரும் மறந்து விட்டது.) தலைமையிலே சிறப்பாக நடை பெற்றது. இணுவிலைச் சேர்ந்த அன்பர் ரங்கராஜனின் (ஸ்ரீதுர்க்கா அம்மன் ஆலய அறங்காவலரின்)வெளி யீட்டுரையும், பாலசிங்கத்தின் வரவேற்புரையும் பற்றிமாகரனின் ஆய்வுரையும் வெளியீட்டு விழாவை அணி செய்தன. கணிசமான அளவு தமிழ் ஆர்வலர்கள் வருகை புரிந்து சிறப்பித்தனர் திருமதி சங்கரலிங்கம் (முன்னாள் கல்விப்பணிப்பாளரான அமரர் சங்கரலிங்கத்தின் பாரியார்) முதற்பிரதிபெற்றுப் பெருமைப் படுத்தினார்.

### ஓர்இலக்கிய நிகழ்வு

இந்நிகழ்வுகள் யாவினதும் உச்சமாகக் கூற வேண்டியது லண்டன், தமிழ் தகவல் நடுவம் 'வல்தம்ஸ் ரோவ்' இல் உள்ள கத்தோலிக்க இளைஞர் (YMCA) மண்டபத்தில் 18.08.2002 அன்று நடத்திய 'ஓர் இலக்கிய நிகழ்வு'ஆகும்.

இந் நிகழ்வில் தமிழகத்தைச் சேர்ந்த தரமான விமர்சகரும், ஒல்லாந்துப் பல்கலைக் கழகத்தில் தமிழ் விரிவுரையாளருமான தமிழவன், 'கண்ணில் தெரியுது வானம்' நூலின் விமர்சனத்தை நிகழ்த்தினார. தொல்பொருள் தமிழ் அகராதி வரலாறு விமர்சனம் இளைஞர் ஒருவரால் நிகழ்த்தப்பட்டது குறிப்பிட்ட இருவரின் வருகைபற்றிக் குறைப்பட வேண்டாத வகையில் இவர்களின் விமர்சனங்கள் அமைந்தன. திரைப்பட ஆய்வையும் தமிழ் இலக்கிய நூல்களின் விமர்சனத்தையும் சம நிலையில் பேணி (திரைப்படங்கள் பற்றி மட்டும் பதினொரு நூல்கள் எழுதியுள்ளார்) ஆழமாகவும் அகலமாகவும் நிகழ்த்திவரும் யமுனா ராஜேந்திரனின் அன்றைய விமர்சனமும் போற்றத்தக்கதாகவே இருந்தது.

'ஓர் இலக்கிய நிகழ்வில்' இடம் பெற்ற உரையாடல்கள் ஆரோக்கியமானவையாகவும், காரசாரமானவையாகவும் கூட இருந்ததைக் குறித்தேயாக வேண்டும். இவையும்கூட எமது நாட்டின் நிகழும் இலக்கியப் பரிமாற்றங்களையே பெரிதும் நினைவூட்டின சிறப்பு என்னவென்றால் கலந்துரையாடலில் கலந்து கொண்டவர்களின் வாசிப்புப் பரப்பும் பரிமாணமும் எம்மவரிலும் ஆழமும் விசாலமும் மிகுந்தே காணப்பட்டன. தமிழ்ப்பற்றை உணர்ச்சி வசமாக அன்றி அறிவுபூர்மாக அவர்கள் அணுகுகிறார்கள், சிந்திக்கின்றார்கள்,செயற்படுகிறார்கள் எட்டச் சென்றால்தான் மலையின் உயரமும் விசாலமும் பயன்பாடும் கூடுதலாகத் தெரியும் போலும்!


பத்மநாபஐயர் ஏற்பாடு செய்திருந்த இக் கூட்டத்தில் அவர் என்னைக் கௌரவித்து உரையாற்றி அறிமுகம் செய்ததோடு எழுத்தாளர் சார்பில் எனக்கு ஓர் அன்பளிப்பும் செய்தார். அவரதும் எழுத்தாளர்களதும் அன்பும் பண்பும் என்றும் நன்றியுடன் நினைவு கூர வேண்டியன.

### தரணி எங்கும் வாழும் தமிழரின் பிம்பம் ttn

''உலகத் தமிழரின் இன்னோர் கண் ''எனப்பாராட்டப்படும் ttn தொலைக்காட்சி பிரான்சைத் தலைமையகமாகக் கொண்டு சிறப்பாக இயங்கி வருகின்றது( 5-7 Rue Emile Zola, France) நாளின் இருபத்து நான்கு மணி நேரமும் ஏதோ ஒரு நிகழ்ச்சி- பயனுள்ள நிகழ்ச்சி- இத் தொலைக் காட்சியில் நடந்துகொண்டே இருக் கும் பொது அறிவுப் போட்டிகள் முத லாகத் தாயகத்தின் (ஈழத்தின் )அன் றாடச் செய்திகள் உட்படக் கண்களுக்கும் ,செவிகளுக்கும்,கருத்துக்கும் இன்பம் பயக்கும் வகையில் நிகழ்ச்சிகளை ஒழுங்குபடுத்தி தருகின்றார்கள். நான் யாழ்ப்பாணத்தில் இருந்தாலும் பெற முடியாத தமிழீழம் சார் தகவல்களை ttnனின் மூலம் பெற்றேன என்றால் அது உண்மை. வெறும் புகழ்ச்சியில்லை. தாய்லாந்து, நோர்வே மாநாடுகள், சந்திப்புக்கள் அவை பற்றிய விரிவான விமர்சனங்கள் உரையாடல்கள் எல்லாம் நேருக்குநேர் காண்பது போன்ற உணர்வுடன் கண்டேன். ''கண்டறியாதன கண்டேன்''

ttnஇல் பணியாற்றும் அ.ரவி யாழ். பல்கலைக்கழக கலைப் பட்டதாரி சிறுகதை எழுத்தாளர். தமிழ் இலக்கணத்தில் போதிய ஆர்வமும் அதனைக் கற்பிப்பதில் தீவிர விருப்பும் கொண்டவர். இவர் 'தேம்ஸ் நதி ஓரம்' எனும் நிகழ்ச்சியை ஒவ்வோர் திங்கட்கிழமையும் இரவு 11.30 மணிக்கு ஒளிபரப்பி வருகின்றார். கலைநிகழ்ச்சிகள். விழாக்கள், நேர்காணல் முதலியவை 'தேம்ஸ் நதியோரம்' தொடரில் ஒளிபரப்பப்படுகின்றன.

இவ்வகையில் எனது நேர்காணலை நேர் கண்ட நிகழ்ச்சியும் 'தேம்ஸ் நதியோரம்' தொடரில் இடம்பெற்றது. இது ஒருவகையில் எனக்கு புதிதான புதிய நிகழ்ச்சி.! குறித்த நிகழ்ச்சியின் ஒளிப்பதிவு 'நான் தங்கியிருந்த இல்லத்திலேயே இடம்பெற்றது. அது ஏறக்குறைய ஒரு நாடகம் போலேயே அமைந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.



இந்த நிகழ்ச்சி தொலைக் காட்சியில் இடம்பெற்றது இருபது நிமிடங்களே. ஆனால் ஒளிப் பதிவுக்கு எடுத்த நேரம் இரண்டு மணித்தியாலங்களிற்கு மேல்! திரைப்பட சூட்டிங் போல ஒளிப்பதிவாளர் தட்டுடல்படுத்தி என்னிடம் சரியாக வேலைவாங்கியதை மறக்க முடியாது! உண்மையில் அவரின் கலாரசனை, உணர்வு என்பன என்னால் மறக்க முடியாதவை.

'ஐ பி ஸி' (IBC) என்ற உலகளாவிய தமிழ் வானொலியினர் சார்பில் ராஜன், ஜமுனா ராஜேந்திரன் ஆகிய இருவரும் வானொலி நிலையத்திற்கு அழைத்து என்னை நேர் கண்டனர். எல்லாமாக நான்கு நேர்காணல்கள். ஒவ்வொன்றும் பதினைந்து நிமிட இடைவெளி கொண்டவை. ஒலிப்பதிவாயின. எனது எழுத்துப் பணி, நாடகப்பணி, ஆசிரியர்பணி என்பவற்றையே முதன்மையாகக் கொண்டு இந்நேர் காணல்கள் அமைந்தன.

### பொது அவதானிப்புக்கள்

நான் அவதானித்தவரை லண்டனிலே தமிழரின் வாழ்க்கை யந்திரப் பொறிகளின் இயக்கத்திற்கு எவ்விதத்திலும் சளைத்ததல்ல. பகல் இரவு என்ற பேதமின்றி உழைப்பு, உழைப்பு, ஓயாத உழைப்பு! அரிதாகக் கிடைக்கும் ஓய்வுகளைக் கூடிக் களித்துக் கும்மாளம் அடிப்பதன் மூலம் தங்களின் மனங்களிற்கு ஆறுதல் அளிக்க முற்படுவதையும் காணக் கூடியதாயிருக்கின்றது.

கோயில் குளமென்றும், விழாக்கள் என்றும் எம்மவர் ஈடுபாடு கொண்டு சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் அவற்றைத்தம் மன அமைதிக்கும், கவலை மறப் பிற்கும் பயன்படுத்துவதாகத் தோன்றுகின்றது. ''என்ன இருந்தாலும் எங்கள் நாடு போலாகுமா?'' என்று அவர்கள் மனம் திறந்து கூறினாலும் கம்பளி மூட்டை என்று கரடியைக் கட்டிக்கொண்டவர் போலத் தமது இரவல் தாய்நாட்டைத் துறக்க முடியாதவர்களாய் இருப்பதையும் கண்டேன்.

பிள்ளைகளின் கல்வி, ஊரிலுள்ள தம்மில் தங்கியிருக்கும் உறவினருக்கும் நிதி உதவியும் பிற உதவியும் செய்ய வேண்டிய நிர்ப்பந்த தேவை என்பவற்றைச் சாக்காகக் கொண்டு லண்டனிலேயே தொடர்ந்து வாழவே விரும்புகிறார்கள்.

பூப்பு நீராட்டு, திருமணம், பிறந்தநாள் என்பன மிக விமர்சையாக கொண்டாடப்படுகின்றன. இவற்றிற்கெனத் தம் உழைப்பில் கணிசமான தொகையை விரயம் செய்யவும் இவர்கள் தயங்குவதில்லை. பிள்ளைகளின் நடன, இசை, அரங்கேற்றங்களுக்கென்று வீட்டையே ஈடுவைத்துச் செலவழிப்பவர்களும் இருக்கிறார்கள் என்று அறிந்தேன்.

உடை, உணவு என்பவற்றில் தஞ்சமடைந்த நாட்டின் பாணிகள் பெருமளவு பின்பற்றப்படுகின்றன. ஆனால் சமய சடங்கு வைபவங்களுக்குத் தங்கள் சொந்த நாட்டு உடை, உணவுகளைப் பயன் செய்கின்றனர் இது ஓரளவு ஆறுதல் தருகின்றது.

தொலைக்காட்சிக் கலாசாரம் எம்மவரிடையே கலாசார ஒழுக்கச் சீரழிவுகளைப் பரப்புவதாக பரவலாகப் பேசப்படுகின்றது. ஆனால் தொலைக்காட்சியில் ஒளிபரப பப்படும் திரைப்படங்கள், நாடகங்கள், இசை நடன நிகழ்ச்சிகள் போன்றவற்றால் லண்டனிலுள்ள தமிழ்க் குழந்தைகள் இன்னும் தமிழை முற்றாக மறந்து விடாது பேசவாவது தெரிந்து வைத்திருக்கின்றார்கள். இந்த நிலை அடுத்த பரம்பரை வரை தொடருமா என்பது கேள்விக் குறி தான். தமிழ், தமிழிசை, நடனம் என்பன பெரும்பாலும் வசதியுள்ள பெற்றோரின் பிள்ளைகளுக்கு பயிலும் வாய்ப்பைத் தந்துள்ளன. ஆனால் அடுத்த தலைமுறை இவற்றை எந்த அளவிற்குத் தமிழிலே தவள விடபோகின்றன என்பதைச் சாதாரண பெற்றோர் தம்பிள்ளைகளுக்கு அளிக்கும் வாய்ப்புக்களைக்கொண்டு சந்தேகிக்க வேண்டியதாயுள்ளது.

லண்டனிலே கல்வி கற்கும் வாய்ப்புக்கள் பெருமளவு உள்ளன. கல்விமுறைகளும் காலத்துக்கு கேற்ப மாற்றமும்முன்னேற்றமும் அடைந்திருக்கலாம்; ஆனால் அங்கு கல்வியின் தரம் வீழ்ச்சியடைந்து விட்டதாக பரவரலாக குரல் எழுந்துள்ளது.

''இரண்டாண்டில் கல்வித் தரத்தை உயர்த்துவேன், இல்லையேல் என் அமைச்சர் பதவியை துறப்பேன்'' என்று சூளுரைத்த பிரித்தானிய கல்வி அமைச்சர் தம் சூள் பிழைத்தபடியால் தமது பதவியை துறந்தார் என்பது செய்தி.

பல்லின மக்களுக்கும் ஒரே முறைக்கல்வியை ஒரே வகைப் பாடசாலைகளின் நிழலிலே கற்க நேர்வதால் இந்த வீழ்ச்சியா என்ற சிந்தனையும் அங்கு தோன்றி விட்டது. பிரிட்டிஷ் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் ஆங்கிலேயப் பிள்ளைகளுக்கும் கல்வி வழங்கும் முறைமை தனித்துவமானதாகவும், பிற இனங்களான வந்தேறிகளிலிருந்து அது வேறுபட்ட தாகவும் இருத்தல் வேண்டும் என்று குரல் எழுப்பியது. இந்தச்சிந்தனையின் எதிரொலிதான். ஆனால் ஜன நாயக முறையின் முன்னோடியரன பிரித்தானியா, பெயரளவிலாவது அந்தப் பெருமையைக் காப்பாற்ற முடிவு செய்து, அந்தக் குரலை அமுக்கி விட்டது.

கல்வியின் நவீனத்துவமும பெறுமானமும் எம் சந்ததியினருக்கு (பிரித்தானிய வாசிகள்) வேண்டியதுதான். மறுத்தற்கில்லை. ஆனால் அது எமது பாரம்பரிய பெறு மானங்களையும் வாழ்வியலையும் சிந்தனையையும் எந்த அளவிற்கு பாதிக்கின்றது என்பதை அங்கு வாழும் பெற்றோர் கவனித்துக் கொடுக்க வேண்டிய நிலையில் உள்ளனர்.

எம்மவரின் வெளிநாட்டு வதிவுரிமைகள், வாழ்வுரிமைகள், தொழிலுரிமைகள், தொழிற் பாதுகாப்புக்கள் என்பன எதிர்காலத்தில் எந்த அளவிற்கு அந்தந்த நாட்டினரால் கணிக்கப்படப் போகின்றன என்று சிந்திப்போர் தொகையும் பெருகி வருகிறது. இலங்கையில் முனைப்புப் பெற்று வரும் சமாதானப் பேச்சு வார்த்தைகள் சாதகமான நற்பயன் களைத தருமானால் அந்த வேளை யில் தம் நிலை என்னவாகும் என்ற அச்சமும் பலரிடையே தோனறத் தொடங்கி விட்டது. நாடு திரும்பி னால் தமது பொருளாதார வளம் சிதையலாம் என்பதோடு, தாம் புதிதாகப் பழகிக் கொண்ட வாழ்க்கை முறைகளோடு தாயகத்தில் வாழ முடியுமா, நீரிலிருந்து வெளிப்பட்ட மீனினம் போல தாம் தவிக்க வேண்டி நேரிடுமே என்ற அச்சமும் கலவரமும்

**சொக்கன்**

சீழ்ப்பிடித்த புண்ணுக்கு நெறி கட்டுவது போல சிலரில் நெறி கட்டுவதையும் காணக்கூடியதாயுள்ளது.

### விடைபெறுகிறேன்

''ஏதோ சாதிக்க முடியாத மாபெரும் சாதனை புரிந்தவர் போல உமது லண்டன் பயணத்தை நீட்டி முழக்கினீரே? லண்டன் இன்று எம்மவருக்கு-பலருக்கு-அவர்களின் வீட் டுக் கொல்லைப்புறம் போல் ஆகி விட்டதை நீர் அறியீரா?'' என்று சிலர் எனக்கு நெருக்கமானவர்கள் கேட்கிறார்கள். 'என் மனைவி லண்டன் போனவர்தாம். அவரும் தமது பிரயாண அனுபவங்களை எழுதலாமே என்று என் நண்பர் ஒருவர் நையாண்டி செய்கிறார். இவர்களுக்கெல்லாம் பதில் இறுப்பது அவசியம் என்று தோன்றவில்லை. ஆனால் ஒன்று....

லண்டன் செல்ல கிடைக்காதவர்களும், வெளியுலகம் பற்றி அறிய விரும்புவோரும் நான் என் கட்டுரையில் தந்த தகவல்களால் ஓரளவு நிறைவு பெற்றிருக்கலாம். அந்த நிறைவு ஒன்றே இக்கட்டுரைத் தொடரை நான் எழுதியதன் பயன் என்ற திருப்தியுடன் வாசகர்களிடமிருந்து விடைபெறுகின்றேன்.

(முற்றும்)

## விமானக்கட்டணம் உயர்வு

(கொழும்பு)

இலங்கையிலிருந்து இந்தியாவுக்கான விமானக்கட்டணங்கள் யாவும் இன்று தொடக்கம் 25 வீதத்தால் உயர்த்தப்படவுள்ளன.

இந்தியாவுக்கான விமானக் கட்டணங்கள் மட்டுமே உயர்த்தப் பட்டுள்ளதாக எயர்லங்கா நிறுவனம் அறிவித்துள்ளது. (உ-8)

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

வன்னிப்பிரதேச தமிழ் இலக்கிய முயற்சிகள் பற்றிய கருத்தரங்கும் கலை நிகழ்ச்சிகளும் நேற்று ஆரம்பமாகின.

வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத்தில் நாளை வரை இந் நிகழ்வுகள் இடம் பெறவுள்ளன. (உ)

## பயிற்சித் திட்டம்

(யாழ்ப்பாணம்)

நியாப் திட்டக் கட்டுமானப் பணிகளில் ஈடுபடுபவர்களுக்கு எதிர்வரும் 25,26ஆம் திகதிகளில் பயிற்சித் திட்டம் ஒன்று இடம்பெறவுள்ளது.

வேலையின் தரத்தை உயர்த்துவதை நோக்கமாகக் கொண்ட இப் பயிற்சித் திட்டத்தில் மத்திய நீர்ப்பாசனத்திணைக்கள அதிகாரிகள், நியாப்திட்ட தொழில் நுட்ப பணிப்பாளர், மத்திய நீர்ப் பாசனத் திணைக்களப்பணிப்பாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டு விளக்கமளிக்கவுள்ளனர். (உ-4)

# இன்று ஒரு தகவல்

## கர்வம் கொள்வது தவறு

ஒரு தீக்குச்சி தீப்பெட்டியைப் பார்த்து "நாம் இரண்டு பேரும் தானே உராய்ந்து கொள்கிறோம்... ஆனால் நான் மட்டும் தீப்பிடித்து எரிந்து போகிறேன். நீ அப்படியே இருக்கிறாயே!" என்று கேட்டதாம். அதற்குத் தீப்பெட்டி "உனக்குத் தலையிலே கனம் இருக்கிறது அதனால் அழிந்து போகிறாய்" என்றதாம். எப்படி இருக்கிறது இந்தப் பதில்? தலையிலே கனமுள்ளவர்கள் யாருமே சரியாக இருக்கமுடியாது! எவ்வளவு பெரியவர்களாக இருந்தாலும் சரி கர்வம் என்பது கூடவே கூடாது.

இதை விளக்குவதற்கு மகான் சத்தியசாயி பாபா ஒரு சம்பவத்தைச் சொல்கிறார். அர்ஜுனன் தீர்த்தயாத்திரை பண்ணினான். அப்போது தென்னிந்தியாவுக்கு வந்தானாம், இராமேஸ்வரத்துக்குப்போன பொழுது, அங்கே இலங்கைக்குக் கற்களை அடுக்கிப் போடப்பட்டிருந்த பாலத்தைப் பார்த்தானாம். ஒரு சிறு குரங்கு அதற்குப் பக்கத்தில் விளையாடிக் கொண்டிருந்திருக்கிறது! அதைப் பார்த்துவிட்டு அர்ஜுனன் சிரித்திருக்கிறான். "ஏன் சிரிக்கிறாய்?" என்று அந்தக் குரங்கு கேட்டிருக்கிறது.

"இராமன் மிகச்சிறந்த வில்வீரன். அப்படி இருக்கும் போது அவன் அம்புகளாலேயே ஒரு பாலம் கட்டியிருக்கலாமே! அதை விட்டுவிட்டு, போயும் போயும் உன்னைப் போன்ற குரங்குகளைத் துணையாக வைத்துக் கொண்டு இப்படி ஒரு கருங்கல் பாலத்தைக் கட்டியிருக்கிறானே!" என்றான். "அம்புகளால் பாலம் கட்டமுடியுமா?" என்று கேட்டது குரங்கு.

"ஏன் முடியாது? என்னால் முடியும் என்றான் அர்ஜுனன். "அம்பால் பாலம் கட்டலாம். இருந்தாலும் என்னைப் போன்ற குரங்குகள் ஏறி நடந்தால்... அது தாங்குமா? அதனால் தான் இராமர் கருங்கல் பாலம் கட்டினார் போல இருக்கிறது" என்றது குரங்கு.

"அப்படியா சொல்கின்றாய்! நான் வேண்டுமென்றால் அம்புகளாலேயே ஒரு பாலம் கட்டுகின்றேன். நீ அதன்மேல் ஏறி நடந்து பார். பாலம் விழுந்துவிட்டதென்றால், நான் தீ மூட்டி அதில் குதித்து உயிர்த்தியாகம் பண்ணிவிடுகிறேன்" என்று மிகுந்த கோபத்தோடு சொன்னான் அர்ஜுனன். உடனே அந்தச்சிறிய குரங்கு பெரிய உருவம் எடுத்து விட்டதாம். கையில் கதையோடு அர்ஜுனன் முன்நின்றான் அனுமன், "பார்த்தா! என்னுடைய தலைவர் இராமரையா இழிவாகப் பேசுகிறாய்? நீ இப்பொழுது பாலம் கட்டு... நான் என்னுடைய பலத்தைக் காட்டுகிறேன்" என்றான் அனுமன்.

அர்ஜுனன் தனது காண்டீபத்தை எடுக்கிறான். சரமாரியாக அம்புகளை விடுகிறான். அவைகள் ஒன்றோடு ஒன்றாகக் கோர்த்துக்கொண்டு பாலமாக அமைந்து விட்டது. அர்ஜுனன் தலை நிமிர்ந்து நின்றான். அனுமன் உயரக்கிளம்பி... அங்கேயிருந்து பாலத்தில் வந்து இறங்கினான். பாலம் நொறுங்கிப் போயிற்று. "என்ன அர்ஜுனா இப்பொழுது என்ன செய்யப் போகிறாய்? என்றான் ஏளனமாக. அர்ஜுனன் தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டான். சொன்னபடி தீமூட்டச் சொன்னான். அதிலே குதிப்பதற்காக மூன்று தடவை சுற்றி வந்தான். அப்பொழுது கிருஷ்ணர் அங்கே தோன்றினார்.

"என்ன அர்ஜுனா... என்ன நடந்தது?" என்று ஒன்றும் தெரியாதது மாதிரி கிருஷ்ணர் கேட்டார். அர்ஜுனன் வாயைத் திறப்பதற்கு முன் அனுமன் வாயைத் திறந்தான். நடந்ததைச் சொன்னான். அர்ஜுனர் சவால் விட்டபடி உயிர் துறந்தே ஆக வேண்டும் என்றான் அனுமன். கிருஷ்ணர் யோசித்தார். "நல்லது! இந்தச் சவால் விட்டதற்கும்... நடந்ததற்கும் யார் சாட்சி? பெரியவர் ஒருவரை வைத்துக் கொண்டு அல்லவா இந்தப் போட்டி நடந்திருக்க வேண்டும்" என்றார்.

"அதனால் என்ன இப்பொழுது மறுபடியும் அந்தப் போட்டியை நடத்தி விட்டால் போகிறது. என்னால் அந்த அம்புப்பாலத்தை நொருக்க முடியாதா?" என்றான் அனுமன். "சரி... இப்பொழுது மறுபடியும் அது நடக்கட்டும" என்றார் கிருஷ்ணர். அர்ஜுனன் அம்புப்பாலம் அமைத்தான். அனுமன் ஏறிக்குதித்தான். பாலம் அசைந்து கொடுக்கவில்லை. இப்போது அனுமன் தலையைக் குனிந்து கொண்டான்! அர்ஜுனன் நன்றியோடு நிமிர்ந்து பார்த்தான். கிருஷ்ணனின் தோள்களிலும், முதுகிலும் இரத்தம். பதறிப்போய் "என்ன சுவாமி? என்ன நடந்தது?" என்றான்.

உன் அம்புப்பாலத்தை நான்தான்முட்டுக் கொடுத்துத் தாங்கினேன். அனுமன் குதித்தபோது... என்மீது ஏற்பட்ட காயங்கள் இவை! பின்னே, உன்னுடைய அம்பு பலத்தினாலேயா பாலம் நின்றதென்று நினைக்கிறாய்?" என்றார். முதலில் அர்ஜுனன் பின்னர் அனுமன் இருவருக்குமே கர்வபங்கம் ஆகிவிட்டதாம். அவர்களிடமிருந்த கர்வம் போய்விட்டது. யாராயிருந்தாலும் கர்வம் கூடாதென்பதை இதிலிருந்து நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

இந்தக் காலத்தில் நாம் எல்லோரும் எந்த விஷயத்துக்கெல்லாம் கர்வப்பட்டுக் கொள்கிறோம். இரண்டு பெண்கள் தங்களுடைய கணவன்மார்களைப் பற்றி மிகவும் பெருமையாகப் பேசிக் கொண்டார்களாம். அதிலே ஒருத்தி " என் வீட்டுக்காரரிடம் எந்த விஷயத்தைக் கொடுத்தாலும் சரி... அந்த விஷயத்தைப் பற்றி அழகாக ஒரு மணிநேரம் பேசுவார்' என்றாளாம். உடனே மற்றவள் "அது என்ன பிரமாதம்? என் வீட்டுக்காரர் விஷயம் இல்லாமலே நாள் முழுவதும் பேசிக் கொண்டிருப்பார் " என்றாளாம்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

---

மக்களின் வாழ்வாதார அடிப்படைகளைத் தகர்த்து

# தனது பேரினவாதக் கோரப்பசியை தீர்க்க அரசு முற்படுகின்றது

### வலி - தெற்கு பொது அமைப்பு களின் ஒன்றியம்

(யாழ்ப்பாணம்)

எமது மக்களைப் பாதுகாக்க வருவதாகக் கூறிய இராணுவம் யாழ். மண்ணை விடுவிக்கப்பட்ட பிரதேசம் என்று பறைசாற்றியது. ஆனால், இன்று எம் மக்களிடமிருந்து தன்னைப் பாதுகாக்கப் பாதுகாப்பு வலயம் அமைப்பதாகக் கூறுவது வேடிக்கையாகவுள்ளது.

இராணுவத்தினரிடம் மட்டும் இன்று குடாநாட்டில் ஆயுதங்கள் உண்டு. வேறு யாரிடமும் ஆயுதங்கள் இல்லை என்பதை அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வில்லைப் போல் தெரிகின்றது. இந்தகைய சந்தேக நிலையில் பேச்சு வார்த்தை மேசைக்குப் போவது எந்த நிலையில் நன்மை தரப்போகின்றது.

வீணே காலத்தைக் கடத்தி எமது மக்களின் வாழ்வாதார அடிப் படைகளைத் தகர்த்துத் தனது பேரினவாதக் கோரப் பசியை நிறைவு செய்ய அரசாங்கம் முற்படுகின்றது என்றே நாம் கருதுகின்றோம்.

"நம்பியார் கருத்துக்கான கண்டன அறிக்கை" என்ற தலைப்பில் வலி தெற்கு பொது அமைப்புக்களின் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும், 'அனைத்து மக்களுக்கும் இயல்பு வாழ்க்கை' என்பதைப் பிள்ளையார் சுழியாகக் கொண்டு உருவாக்கிய புரிந்துணர்வு ஒப்பந்தம், இலட்சோப இலட்சம் யாழ். மக்கள் தமது சொந்த மண்ணில் வாழும் உரிமையைக் கூட மறுக்கும் ஒப்பந்தமாக இன்று வியாக்கியானம் செய்யப்படுகின்றது.

யாழ்.குடாநாட்டின் வாழ்வாதார உற்பத்தி மையங்களை ஆக்கிரமிப்பதன் மூலம் மறைமுகமாக எமது மக்களின் பொருளாதார அடித் தளத்திற்கு மரண அடிகொடுக்கும் அரசின் ஒருசதித்திட்டமே இந்த உயர் பாதுகாப்பு வலயம் என்ற திரைக்குள் அடங்கியிருக்கின்றது. இந்த ஒப்பந்தம் மூலம் குடாநாட்டு வளமான விவசாயப் புலங்கள், மீன்பிடித்தளங்கள், கைத்தொழில் மையங்கள் அனைத்தும் சூறையாடப்பட்டுள்ளன.

இந்திய அமைதிப்படை ஆக்கிரமிப்புப் படையாகச் செயற்பட ஆரம்பித்த போது, ஆயுதபாணிகளாக எமது போராளிகள் வீரம் செறிந்த போராட்டத்தை இங்கு நடாத்திய போது கூட, உயர் பாதுகாப்பு வலயம் என்று எமது மக்கள் விரட்டியடிக் கப்படவில்லை. இன்று இப்போராளிகள் கத்தியின்றி, இரத்தமின்றி இதயசுத்தியோடும் சாமாதான வேட்கையோடும் நடமாடுகின்ற வேளையில் உயர்பாதுகாப்பு வலையம் என்று மக்களைக குடியேற விடாது தடுப்பதன் உள் நோக்கம் எமக்குப் புரியாததல்ல.

உயர்பாதுகாப்பு வலயம் அமைவதை நியாயப்படுத்த இந்திய இராணுவ நிபுணர் லெப்டினன் ஜெனரல் சதீர் நம்பியார் முற்பட்டுள்ளார். இந்திய அமைதிப்படை இருந்த போது ஆயுதபாணிகளாகத் தமிழீழ விடுதலைப் புலிகள் நடமாடிய அன்றைய நிலைக்கும், அவர்களது இன்றைய நிலைக்கும் வேறுபாடு காணமுடியாது அவர் தடுமாறியுள்ளார்.

அன்றை அதிர்ச்சி இன்னும் அவரை விட்டு நீங்கவில்லை என்றே தெரிகின்றது. தமிழ்த் திரைப்படங்களில் கதாநாயகர்களுக்கு எதிராக தனது சதித்திட்டங்கள் தோற்ற நிலையில் வில்லனாக மாறும் எம்எவ்.நம்பியாராகவே யாழ். மக்கள் இன்று அவரைக் காண்கின்றனர்.

எமது மக்களின் இயல்பு வாழ்க்கையை வழங்க மறுக்கும் அரசுடன் எமது ஏகப் பிரதிநிதிகளாகப் பேச்சு வார்த்தைக்குச் செல்லும் தமிழீழ விடுதலைப் புலிகள் எமது மக்களது உணர்வுகளையும் நிலையையும், புரிந்து கொண்டு செயற்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (உ)

---

# இந்திய நல்லுறவை பேணுவதனூடாக இனப்பிரச்சினைக்குத் தீர்வு

## மிலிந்த மொறகொட கருத்து

(கொழும்பு)

தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் சமாதான முயற்சிகள் இனப் பிரச்சினைக்கான தீர்வு அல்ல. அது தீர்வுக்கான ஒரு வழி மாத்திரமே.

பொருளாதார மறு சீரமைப்பு அமைச்சர் மிலிந்த மொறகொட நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் உரையாற்றும் போது இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

வடக்குக் கிழக்குப் பிரச்சினைகளைக் கட்டம் கட்டமாகவே தீர்க்க முடியும்.

பிரதமர் ரணில் விக்கிரம சிங்காவுக்கும் இந்திய அரசாங்கத்துக்கும் இடையில் நிலவும் நல்லுறவின் ஊடாக பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதன் மூலம் தெற்காசியாவில் இலங்கை முக்கியமான தொரு நிலையமாகத் திகழும் வாய்ப்பு ஏற்படும்.



பிரதமரின் தலைமைத்துவத்தின் கீழ் இந்தியாவின் உதவிகளைப் பெற்றுக் கொள்வது மிக முக்கியமானது என்றும் அமைச்சர் மேலும் கூறினார். (த)

---

## இராசி பலன்

**01. 02. 2003**

**(தை 18, சனி)**

| | |
|---|---|
| அமாவாசை | பி.ப 4.49வரை |
| திருவோணம் | பி.இ 2.10வரை |
| இராகுகாலம் | 9.36 - 11.06 |
| சுபநேரம் | 3.36 - 5.06 |

### அமாவாசை விரதம்

**மேடம்**
தூரதேசச் செய்தி, முயற்சி கைகூடும், மேன்மையடைதல், நிலைமாற்றம்.

**இடபம்**
பிரயாணம், புதியசிந்தை, முயற்சி தாமதம், கட்டுப்பாடு.

**மிதுனம்**
காரிய தடங்கல் அமைதிக் குறைவு, எதிரிகள் தொல்லை, உடல் வியாதி.

**கடகம்**
சென்ற இடத்தில் செல்வாக்கு, களஸ்திர சுகம், முயற்சி பலிதம், பொருள் சேர்க்கை.

**சிங்கம்**
நினைத்த காரியம் கைகூடும், ஆரோக்கியம், நல்லசம்பவம், பகைவர் நேசம்.

**கன்னி**
ரோகநிலை, தொழில் விருத்தி, திடீர்நன்மை, முயற்சி தாமதம்.

**துலாம்**
பயந்த சுபாவம், மாதாவழி உறவு, காரியதாமதம், அறிவாற்றல்.

**விருச்சிகம்**
கூட்டு முயற்சி, சகோதரர் உதவி, அன்னியர் சந்திப்பு, தனவரவு.

**தனுசு**
தேவையற்ற வார்த்தை, செல்வாக்குக் குறைவு, வேலைக்கஷ்டம், முயற்சி தாமதம்.

**மகரம்**
கற்பனை மிகுதி, முயற்சி பலிதம், பெரியோரால் மதிக்கப்படுதல், திடீர்நன்மை.

**கும்பம்**
உறவினர் மனஸ்தாபம், பிரயாணம் சயனசுகக் குறைவு, போசன சுகம்.

**மீனம்**
செய்தொழிலால் நன்மை, உறவினர் வருகை, மனமகிழ்ச்சி, காரிய சித்தி.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)
- வளவன்.

---

# இலங்கைத் தேசியக் கொடிகள் இந்திய வீதிகளில் பறக்கும்

(கொழும்பு)

இலங்கையின் சுதந்திரதினத்தன்று தேசியக் கொடிகளை இந்தியாவின் வீதிகள் எங்கும் பறக்க விடுவதற்கு தமிழகமாநில அரசு அனுமதியளித்துள்ளது என தமிழகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இலங்கையின் சுதந்திரதினக் கொண்டாட்டங்கள் எதிர்வரும் செவ்வாயன்று சென்னை மகாபோதி நிலையத்துக்கு முன்னால் நடைபெறவுள்ளது.

அன்றையதினம் இந்தியாவின் வீதிகள் எங்கும் இலங்கையின் தேசியக் கொடியைப் பறக்க விடுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றன.

வெளிநாடு ஒன்று தனது நாட்டு சுதந்திரதினத்தன்று தேசிய கொடிகளை பறக்கவிடுவதற்கு இந்திய அரசு அனுமதியளித்திருப்பது இதுவே முதல் தடவையாகும். (உ-8)

---

# ஊனமுற்றமாணவர்களுக்கு நலநோம்பு உதவிகள்

(யாழ்ப்பாணம்)

வடக்கில் வறுமைக்கோட்டின் கீழ்வாழும் ஊனமுற்ற மாணவர்களின் நலநோம்பலுக்கான உதவி வழங்கல் செயற்திட்டத்தின் முதற்கட்டமாக யாழ். மாவட்டப் பாடசாலைகளில் கல்வி பயிலும் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் பிறப்பால், யுத்த அனர்த்தத்தால், ஊனமுற்ற மாணவர்களுக்கு, உதவிகள் வழங்கப்படவுள்ளன

இதில், பயன்பெறவிரும்பும் மாணவர்கள் தத்தமது பாடசாலை அதிபரின் சிபார்சுக் கடிதத்துடன் சுயவிபரங்களை, தலைவர், மானிப்பாய் பரிஷ்லியோக் கழகம், லயன்ஸ் காரியாலயம் யாழ்வீதி, மானிப்பாய். என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.. (உ)

---

## கருத்துரை

(யாழ்ப்பாணம்)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் காங்கேசன்துறை தொகுதிக் கிளையில் நாளை பி.ப.3மணிக்கு மாவை. சோ. சேனாதிராசாவின் கருத்துரை இடம்பெறவுள்ளது. (உ)

ஆற்றுவார் ஆற்றல் பணிதல் அதுசான்றோர்
மாற்றாரை மாற்றும் படை —குறள்—

# வலம்புரி

## பிக்குகளின் யாழ். வருகை !

அரசுக்கும் - விடுதலைப் புலிகளுக்குமிடையே சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டதை அடுத்து தென்னிலங்கை மக்களின் யாழ் .வருகையும் ஆரம்பித்தது.

யுத்தத்தினால் அழிந்து போன யாழ்ப்பாண மண்ணைப் பார்ப்பதில் தென்னிலங்கைச் சிங்கள மக்களுக்கு அலாதிப் பிரியம்.

தமிழ் மக்கள் யுத்தத்தினால் எப்பாடுபட்டார்கள், யுத்தத்தின் கொடூரத்தை அவர்கள் எப்படித் தாங்கிக் கொண்டார்கள் என்பதை அறிவதற்காகவோ, என்னவோ தென்னிங்கைச் சிங்கள மக்கள் யாழ்ப்பாணத்திற்குப் படையெடுக்கின்றனர். இது ஏ-9 வீதி திறக்கப்பட்டதை அடுத்து தினசரி நடக்கும் சாதாரண நிகழ்வாகும்.

இதன் வரிசையில், புனர்வாழ்வு அமைச்சின் ஏற்பாட்டின் கீழ் நூறு பிக்குகள் அடங்கிய குழு கடந்த இரு தினங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணம் வந்திருந்தது.

புத்த பிக்குகளின் யாழ்ப்பாணவருகை எந்நோக்கமுடையதென்பது அறிய முடியாததொன்றாக இருந்த போதிலும், அவர்கள் பயணித்த வாகனங்களில ''சமாதானத்தை வலியுறுத்தும் பயணம்'' என்ற வாசகம் பொறிக்கப்பட்ட பதாகை கள் காணப்பட்டன.

யாழ்ப்பாணம் வருகை தந்த புத்த பிக்குகள் யாழ்ப்பாணத்திலுள்ள பல இடங்களுக்கும் நேரில் சென்று பார்வையிட்டனர்.

யாழ்.குடாநாட்டு பாடசாலைகளுக்கும் விஜயம் செய்து, மாணவர்களோடு கலந்துரையாடினர். இதன் போது யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல கல்லூரி ஒன்றின் மாணவர் ஒருவர் புத்த பிக்குகளைப் பார்த்து ''நீங்கள சமாதானத்தை ஆதரிப்பதாகக் கூறுகிறீர்கள். அப்படியானால் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு உந்து சக்தியாக இருக்கும் நோர்வேயின் தேசியக் கொடியை ஏன் எரியூட்டினீர்கள்'' என்று கேள்வி தொடுத்தார்.

மாணவனின் எதிர்பாராத கேள்வி பிக்குகளைத் திணற வைத்ததாயினும் அவர்கள் ஓர் உண்மையைத் தெரிவித்தனர். அதாவது ''நோர்வேயின் தேசியக் கொடியை எரித்த பிக்குகள் நாங்களல்ல.'' அவர்கள் ஜே.வி.பி சார்புடையவர்கள். பிக்குகள் முன்னணியைச் சேர்ந்தவர் கள் என்று பதிலளித்தனர்.

மாணவனின் கேள்விக்கு புத்த பிக்குகள் அளித்த பதில் ஓர் உண்மையைத் தெளிவுபடுத்தி உள்ளது.

அதாவது புத்த பிக்குகள் எல்லோரும் சமாதானத் திற்கு எதிரானவர்கள் அல்ல. ஆதரவானவர்களும் இருக்கின்றார்கள். சமாதானத்தை எதிர்ப்பவர்கள் இனவாதக் கட்சிகளின் ஆதரவாளர்கள். இந்த உண்மையைப் புத்தபிக்குகளே வெளிப்படுத்தி உள்ளனர். அவ்வகையில் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த பிக்குகள் சமாதனத்திற்காகப் பாடுபடுவார்களென நம்பலாம்.

# முஸ்லிம்களின் பாதுகாப்புக்கு அரசு — புலிகள் உத்தரவாதமளிக்க வேண்டும்

## ரிசாத் எம்.பி.வேண்டுகோள்

(புத்தளம்)

மீண்டும் எமது மக்கள் சொந்த மண்ணில் குடியேற வேண்டும் இந்தக் குடியேற்றங்கள் மேற்கொள்ளப்படுவதற்கு முன்னர் அரசும், புலிகளும் முழுமையான பாதுகாப்பு உத்தரவாதத்தை அளிக்க வேண்டும்.

மேற்கண்டவாறு வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரிசாத் பதியுதீன் நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

சபை ஒத்தி வைப்பு வேளையில் இடம் பெற்ற விவாதத்தில் மேலும் ரிசாத் எம்.பி. பேசுகையில் ,

வடமாகாண முஸ்லிம்கள் எந்த சமூகத்துக்கும் எதிராக அநீதியான நடவடிக்கையில் ஈடுபட்டதில்லை, போராட்டங்களையும் நடத்தியதில்லை. ஆனால், சகல வசதிகளுடனும் கௌரவமாக வாழ்ந்த இந்த முஸ்லிம்கள் இன்று ஆயிரம் ரூபாவுக்கு கையேந்த வேண்டிய சமூகமாக மாறியுள்ளனர்.

அதே வேளை, மீள் குடியேற்றம் இடம்பெறும் அதே நேரத்தில் புத்தளம் - மன்னார், மறிச்சுக் கட்டிப் பாதை புனர்நிர்மாணம் செய்யப்படடு போக்கு வரத்துகள் தங்கு தடையின்றி நடத்தப்படல்வேண்டும்.

மன்னார் முசலிப்பகுதியில் அகத்தி முறிப்பு கால்வாய் உட்பட குளங்கள் புனர்நிர்மாணம் செய்யப்படல் வேண்டும்

வடமாகாண முஸ்லிம்கள் தொழில் வாய்ப்பில் தொடர்ந்தும் புறக்கணிக்கப்பட்டு வந்துள்ளனர். இந் நிலை மாற்றப்பட்டு தொழில் வாய்ப்புக்கள் வழங்கப்படல் வேண்டும்.

மன்னார், புதுக்குடியிருப்பு பகுதியில் மூன்று முஸ்லிம்கள் விசாரணைக்கென அழைத்துச் சொல்லப்பட்டனர். இவ்வாறு முஸ்லிம்களுக்கு தொடர்ந்தும் அச்சுறுத்தல்கள் இருப்பதாக ரிசாத் எம்.பி. கூறினார். (உ)

## சமுர்த்தி வங்கியாளர் பயிற்சி நெறி

(காரைநகர்)

வடக்கு, கிழக்கு மாகாணங்களின் சமுர்த்தி வங்கியாளர்களிற்கான 11வது பயிற்சி நெறி நேற்று முன்தினம் யாழ்.மாவட்டச் செயலகத்தில் இடம் பெற்றது.

யாழ். மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர் எல்.சிவபாதசுந்தரம் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில், யாழ் மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதன், சமுர்த்தி அதிகார சபை வங்கிநிதி நடவடிக்கை பிரதிப்பணிப்பாளர் ஏ.குணரத்தினா, பிரதிப்பணிப்பாளர்கள் திருமதி பந்துசேனா, எஸ்.நடேசராஜா மற்றும் சமுர்த்தி முகாமையாளர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில், வங்கி நிதி நடவடிக்கை பிரதிப் பணிப்பாளர் ஏ.குணரத்தினா உரையாற்றும் போது யாழ் மாவட்டத்தில விரைவில் 32 சமுர்த்தி வங்கிகள் திறக்கப்படவுள்ளதாக தெரிவித்தார். (உ-246)

## 3 லட்சம் ஒதுக்கு

(யாழ்ப்பாணம்)

திருநகர் யேகேஸ்வரன் அவென்யூ இராசசிங்கம் வீதி ஆகிய பகுதிகளில் உள்ள குடியிருப்புக்களுக்கு மலசலகூட வசதியை ஏற்படுத்தும் வகையில் யாழ்.மாநகராட்சி மன்ற உறுப்பினர் செல்லையா விஜயரட்ணம் 3 லட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளார். (உ)

## அபிராமி அந்தாதி ஓதல்

(யாழ்ப்பாணம்)

வண்னை கலட்டி எச்சாட்டி மகாமாரியம்மன் ஆலயத்தில் இன்று பி.ப 3.30 மணிக்கு அபிராமி அந்தாதி பாமாலை வீரமணி ஐயரால் ஓதப்படவுள்ளது. (உ)

## கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வலயக் கல்விப் பணிமனையின் ஊழியர் நலன்புரிச் சங்கக் கூட்டம் இன்று காலை 10 மணிக்கு, கல்விப் பணிமனையின் முகாமைத்துவ மண்டபத்தில், பிரதிக் கல்விப் பணிப்பாளர் ந.வரதராஜா தலைமையில் இடம்பெறவுள்ளது (த-19)

## விளையாட்டு உபகரணங்கள்

(நவக்கிரி)

ஆவரங்கால் மேற்கு இந்து இளைஞர் மன்றத்தின் சிறுவர் கழகத்துக்கு 25 ஆயிரம் ரூபா பெறுமதியான விளையாட்டு உபகரணங்களை சர்வோதய நிறுவனம் வழங்கியுள்ளது.

மேற்படி மன்றத்தின் நூல் நிலையத்துக்கு பெருமளவு புத்தகங்களையும் சர்வோதயம் வழங்கியிருப்பது குறிப்பிடத்தக்கது (உ-233)

## ஈராக் யுத்தம் ஆரம்பித்தால் இலட்சக்கணக்கான இலங்கையர்க்குப் பாதிப்பு

(கொழும்பு)

அமெரிக்கா, ஈராக் மீது தாக்குதல் நடத்துமானால் மத்திய கிழக்கில் தொழில் புரியும் இலங்கையர்களை பாதுகாப்பாக இலங்கைக்கு திருப்பி அழைத்துக் கொள்வதற்கான சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாக இலங்கை வேலை வாய்ப்புப் பணியகத்தின் தலைவர் சுசந்த பெர்ணாண்டோ தெரிவித்துள்ளார்

இதேவேளை, ஈராக் மீது தாக்குதல் நடத்தப்படும் போது அயல்நாடுகளில் உள்ள இலங்கையர்களை உடனடியாக இலங்கைக்கு அனுப்ப முடியாவிட்டாலும் அங்கிருந்து அயல் நாடுகளுக்கு பாதுகாப்பாக அனுப்புவதுடன் அங்கிருந்து இலங்கைக்கு அழைத்துவர நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

ஈராக் மீது தாக்குதல் நடத்தப்படும் போது ஒருலட்சத்து 60 ஆயிரம் பேர் வரையிலான இலங்கை மக்கள் பாதிக்கப்படும் நிலையில் உள்ளனர்.

எனினும், இதுவிடயம் குறித்து அவர்களின் உறவினர்கள் அஞ்சத் தேவையில்லை என பணியகத்தின் தலைவர் சுசந்த பெர்ணாண்டோ தெரிவித்துள்ளார். (உ-3)

## இன்று பயிற்சி வகுப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கைக் கூட்டுறவு முகாமைச் சேவைகள் நிலையத்தினால் கூட்டுறவுச் சங்கங்களின் முகாமைத்துவ உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி வகுப்பு ஒன்று இன்று காலை யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் கூட்டுறவுச் சங்கத் தலைவர் பெ.கனகசபாபதி தலைமையில் நடைபெறவுள்ளது.

இப்பயிற்சி வகுப்பபை யாழ்ப்பாணம் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பெ.கனகசபாபதி ஆரம்பித்து வைக்க முகாமைச் சேவை நிறுவன உதவித் துணை ஆலோசகர் இ.கோணேஸ்வரன் பயிற்சி வகுப்பை நடத்தவுள்ளார். (வ)

## ஈராக் யுத்தத்தால் இங்கு ஏற்படும் பாதிப்புக்களை எதிர்கொள்ளத் தயார்

### — பாதுகாப்பு அமைச்சர் பகிரங்க அறிவிப்பு —

(கொழும்பு)

ஈராக்கிற்கு எதிரான யுத்தம் ஆரம்பிக்கப்படுமானால், அதனால் ஏற்படும் பாதிப்புக்களுக்கு முகம் கொடுக்கத் தேவையான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருகின்றது.

பாதுகாப்ப அமைச்சர் திலக் மாரப்பன சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையை ஆரம்பிக்கும் வைபவத்தில் கலந்து கொண்டு பேசுகையில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மூன்று மாதங்களுக்குத் தேவையான உணவுப் பொருட்கள் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளன.

ஈராக்கில் யுத்தம் ஏற்பட்டால் பெற்றோல் பீப்பாவுக்குரிய விலை 6 முதல் 7 டொலர்களால் அதிகரிக்கும்.அதனைத் தவிர்ப்பது தொடர்பாகவும் ஆராய்ந்து வருகின்றோம் எனத் தெரிவித்துள்ளார்.

இதே வேளை, ஈராக்கில் தற்பொழுது சுமார் 6 ஆயிரம் இலங்கையர்கள் உள்ளனர். இவர்களின் பாதுகாப்பு தொடர்பாகவும் தொழில் அமைச்சு நடவடிக்கை எடுத்து வருவது குறிப்பிடத்தக்கது. (உ-3)

## மாணவர் போசாக்குத் திட்டம் கோப்பாயில் ஆரம்பம்

(யாழபபாணம)

மாணவர்களுக்கு போசாக்கு உணவு வழங்கும் முன்மாதிரித் திட்டம் நேற்று கோப்பாய் மகாவித்தியாலயத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

பாடசாலை அதிபர் எஸ்.அகிலதாஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், கோப்பாய்தெற்கு கற்பக விநாயகர் தேவஸ்தான பிரதமகுரு சிவஸ்ரீ பா.செல்வசேனக் குருக்கள் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்

போசாக்குஉணவத் திடடத்தை தொடர்ந்து நடைமுறைப்படுத்த பாடசாலைச் சமூகத்தால் நலன் விரும்பிகளிடமிருந்து உதவிகள் எதிர்பார்க்கப்படுகின்றன.

இதேவேளை இம்மாதத்துக்குத் தேவையான நிதி உதவியை நிகழ்வின பிரதம விருந்தினர் செல்வசேனக் குருக்கள் வழங்கியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (இ)

## கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் றிச்சட் பத்திரன கலந்து கொள்ளார்

(கொழும்பு)

கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இனி தான் கலந்து கொள்ளப் போவதில்லை என்று பொதுஜன ஐக்கிய முன்னணிப் பாராளுமன்ற உறுப்பினர் றிச்சட் பத்திரன தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற பொதுஜன ஐக்கிய முன்னணி எம்.பிக்கள் கூட்டத்திலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தனக்குப் பதிலாக கம்பகா மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் அனுரா பண்டாரநாயக்காவை நியமிக்குமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

கட்சித் தலைவர்களின் கூட்டங்களில் றிச்சட் பத்திரன் எம்.பி கலந்து கொள்ளாத பட்சத்தில் அநுரா பண்டார நாயக்காவை நியமிப்பது என இக் கூட்டத்தில் இணக்கம் காணப்பட்டது.

அத்துடன் இது தொடர்பாக சபாநாயகருக்கு எழுத்துமூலம் அறிவிக்குமாறு ஜனாதிபதி எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷவிற்கு கூறியுள்ளார்.(உ-3)

## தினசரி தியானம்

### கஷ்டங்கள்

உனக்கு உதவி புரியவும் ,சரியான வழிகாட்டவும்,இறைவனை வேண்டிப் பிரார்த்தனைகள் செய். அவருடைய அருளுக்காக ஏங்கு. அவரிடம் முழு நம்பிக்கை கொள். கஷ்டங்களால் மனம் தளர்ந்து விடாதே. கஷ்டங்கள் தான் மனத்திட்பத்தைப் பலப்படுத்தும். அவை தான் உன் சகிப்புத்தன்மையை வளர்த்து உன் மனத்தை இறைவன் பால் திருப்புகின்றன. கஷ்டப்பட்டுப் போராடு. நீ வெற்றி பெறுவாய். அப்பொழுது ஆண்டவனும் உனக்கு சகாயம் புரிவார்.

சுவாமி சிவானந்தர்

## மனிதாபிமான கண்ணிவெடி அகற்றும் பிரிவின் பணிகள் இனி யாழிலும்

(யாழ்ப்பாணம்)

ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித திட்டம், நோர்வே மக்கள், மனிதாபிமான கண்ணிவடி அகற்றும் பிரிவு ஆகியவற்றின் பிரதிநிதிகளுக்கு இடையிலான சந்திப்பொன்று நேற்று ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்ட யாழ்.கண்ணி வெடி நடவடிக்கை அலுவலகத்தில் நடைபெற்றது.

இச்சந்திப்பின்போது, ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டப் பிரதிநிதிகள், மனிதாபிமான கண்ணிவெடி அகற்றும் பிரிவினருக்கும், நோர்வே மக்கள் உதவி அமைப்பின் பிரதிநிதிகளுக்கும் யாழ்ப்பாணத்தின் கண்ணிவெடி அகற்றும் நிலைமை குறித்து எடுத்து விளக்கினர்.

அத்துடன் எதிர்காலத்தில் மூன்று தரப்புக்களும் கண்ணிவெடி அகற்றும் விடயத்தில் இணைந்து செயற்பட ஒத்துக் கொண்டதற்கிணங்க, எதிர்கால ஒத்துழைப்புக்கும் இணைந்து செயற்படுவதற்குமான திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. (உ)




ஈராக் மீதான யுத்தத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து பொது ஜன ஐக்கிய முன்னணி எம்பியான பத்தேகம சமித்த தேரர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவதைப் படத்தில் காணலாம்.

## சூரியக் கலங்கள் திரும்பின

(திருநெல்வேலி)

இந்து கலாசார அமைச்சினால் கொள்வனவு செய்யப்பட்ட 70 சூரியக் கலங்கள் மீளளிக்கப்பட்டுள்ளது.

இந்து கலாசார அமைச்சின் யாழ். அலுவலகத்தில் வைக்கப்பட்டிருந்த இச் சூரிய கலங்கள தனியாரிடம் கொள்வனவு செய்யப்பட்டவை. இவற்றுக்கான பணம் செலுத்தப்படாததாலேயே அவை மீளளிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (உ-43)

## புலிகள்...

இதற்காகப் பல செயற் திட்டங்களை நாம் அமுல்படுத்தவுள்ளோம். சிறுவர்களது அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டு மோசமாக பாதிக்கப்பட்டுள்ள நிலையில் அவர்களைப் படையில் சேர்ப்பதற்கு விடுதலைப் புலிகள் முயற்சிக்கிறார்கள் என்று சிங்களப் பேரினவாதிகள் பிரசாரம் செய்து வருகிறார்கள். இத்தகைய தவறான பிரசாரங்கள் தென்னிலங்கையில் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது இந்நிலையில் சுமூகமான ஒரு நிலைக்கு கொண்டுவருவதற்குரிய வேலைத்திட்டங்களை தயாரித்துள்ளோம். இதற்கு யுனிசெவ் போன்ற சர்வதேச நிறுவனங்களின் உதவிகளை எதிர்பார்த்துள்ளோம் என்றும் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்தார். (வ)

## ஆயுதம்...

ஈடுபட்டனர்.

குடத்தனைப் பகுதியில் அண்மைக் காலமாக இரவு நேரங்களில் தொடர்ச்சியாக இடம்பெற்று வந்த திருட்டுக்களைக் கட்டுப்படுத்தும் நோக்கில் அப்பகுதி மக்களால் விழிப்புக்குழு ஒன்று உருவாக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. (த)

YOGI BEAUTY PARLOUR
நடாத்தும்
அழகுக்கலை செயல்முறை பயிற்சிவகுப்புகள்
1 நாள் மட்டும்
இந்தியாவிலிருந்து வருகைதரவிருக்கும் பிரபல
அழகுக்கலை நிபுணரான
திருமதி. மலர் விஸ்வநாதன்
M.A. PGDM. DAB Th
Dip in herbal beauty therapy (Mumbai)
Dip in trichology (Delhi)
Principal of Malar Beauty Parlour (Tamil Nadu)
Institute of Beauty Culture
(Regd: Government of Tamil Nadu)
யாழ். நகரில் பலவருட அனுபவமிக்க
அழகுக்கலை நிபுணரான
திருமதி. யோகினி சண்முகநாதன்
Dip in Cosmetology, Beauty Therapy,
Hair Dressing & Home Science
(India & Col. Srilanka)
இவர்களால் நடத்தப்படும்
இடம் : 75 அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்
காலம் : நாளை 02 - 02 - 2003
நேரம் : காலை 11.00 மணிக்கு ஆரம்பமாகும்
Gold Glow Facial
Platinum Perl Facial } Supersonic
Hair Rebonding
Hair Colouring
High frequency Hair Trealment (பொடுகு, முடி உதிர்தல்)
தொடர்பு கொள்ளும் தொலைபேசி இலக்கம்: 222 2796
[6509]

## புனர்வாழ்வு...

225மில்லியன் ரூபா மட்டுமே நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இத் தொகையில் நாம் யாழ்ப்பாண மாவட்டத்திற்கு 70 மில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளோம். இதனைத் தவிர நட்டஈடு வழங்குவதற்கென வேறாக 52 மில்லியன் ரூபாவும் ஒதுக்கீடு செய்துள்ளோம். எனவே இவ்வருடம் புனர்வாழ்வு புனரமைப்புத் திட்டங்களைச் சிறிய அளவிலேயே செய்ய முடியும். பாரிய திட்டங்கள் யாவும் ''சிறான்'' அமைப்பின் மூலமே மேற்கொள்ளப்படும்.

அத்துடன் யாழ்ப்பாண மாவட்டத்தில் நிவாரணம் வழங்குவதற்கும் பெருந்தொகை நிதியை மாதாந்தம் வழங்க வேண்டிய நிலையிலுள்ளோம். நிவாரணததிற்கென பொருட்களை மாதாந்தம் கொள்வனவு செய்வதில் நடைமுறைப் பிரச்சினைகள எதிர்நோக்கப்படுவதால் மூன்று மாதங்களுக்குத் தேவையான பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கான கேள்விப்பத்திரங்களைக் கோருவது பற்றி ஆலோசித்து வருகின்றோம்.

மேலும் யாழ். மாவட்டத்தில் நிவாரணத்தில் கோதுமை மாவையும் வழங்குவதற்கு முடிவு செய்துள்ளதால் அதனை இங்கேயே கொள்வனவு செய்ய யாழ். அரச அதிபருக்கு நாம் அனுமதித்துள்ளோம் எனக் குறிப்பிட்டார்.

தமிழர் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் அ.விநாயகமூர்த்தி அங்கு உரையாற்றும் போது :-

ஏ-9 பாதையை அரசாங்கம் 24மணி நேரமும் திறந்துவிட ஆவன செய்யவேண்டும். இது விடயத்தில் என்ன தாமதம் இருக்கின்றது எனப் புரியவில்லை. நிவாரணத்திற்கு வேண்டிய அரிசியை கிளிநொச்சியிலும் யாழ்ப்பாணத்திலும் கொள்வனவு செய்யலாம். அப்படிச செய்வதன் மூலம் எம்து விவசாயிகள் நன்மை அடைவார்கள்.

அடுத்து, உயர்பாதுகாப்பு வலயத்தில் மக்களை மீளக் குடியமர அனுமதிக்காமை பெரும் துன்பமாகும். யார் இது பற்றி தீர்மானிப்பதென்பது தெரியாமல் உள்ளது. எனவே பொதுமக்களின் நன்மை கருதி பாதுகாப்புப் படையினரால் பயன்படுத்தப்படும் வாழ்விடங்களில் இருந்து அவர்களை வெளியேற்றச் செய்ய வேண்டும்.

பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்குவதற்கு போதிய நிதியின்மை காணப்படுகிறது. இந்நிலையில் அவற்றின் செயற்பாடுகளுக்கு புனர்வாழ்வு அமைச்சு ஆவன செய்ய வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்.

மேலும் இக் கலந்துரையாடலில் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்களான பெ:கனகசபாபதி, சி.வீ.கே.சிவஞானம், எஸ்.சுப்பிரமணியம் ஆகியோரும் உரையாற்றினர். (இ-77,4)

## சிறுவனைத் தாக்கிய சிறைக் காவலர்

(யாழ்ப்பாணம்)

யாழ்.சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டிருந்த சிறுவன ஒருவன் சிறைக் காவலர்களால் தாக்கப்பட்டுள்ளதாக யாழ். மனித உரிமைகள் ஆணைக் குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

க.கருணாதிநி (12 வயது) என்ற சிறுவனே இவ்வாறு தாக்குதலுக்குள்ளானதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 20ம்திகதி சிறைச்சாலைக்கு கொண்டு வரப்பட்ட பிரஸ்தாப சிறுவன் 22ம் திகதி தாக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (த-19)

THE ROYAL COLLEGE OF JAFFNA
YEAR 1to O/L, ALL SUBJECTS
HEAD TEACHER
VIGNESWARAN ARCHERY
426(302) K.K.S Rd JAFFNA
(6510)

## பத்தரமுல்ல தனியார் வங்கியில் 40இலட்சம் ரூபா கொள்ளை

(கொழும்பு)

கொழும்பு பத்தரமுல்லப் பகுதியில் அமைந்துள்ள தனியார் வங்கி ஒன்றினுள் பட்டப் பகலில் புகுந்த ஆயுதம் தாங்கிய கொள்ளைக் கோஷ்டியினர் அங்கு 40 இலட்சம் ரூபாவை கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

நேற்று நண்பகல் இந்தப் பரபரப்பான சம்பவம் இடம் பெற்றுள்ளது. கொள்ளையில் ஈடுபட்ட ஆயுததாரிகள் வங்கியில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த பாதுகாப்பு ஊழியர்கள் இருவரின் துப்பாக்கிகளையும் அபகரித்துச் சென்றுள்ளனர்.

வெள்ளைநிற வான் ஒன்றில் வந்த நான்கு கொள்ளையர்களே இக் கொள்ளைச் சம்பவத்தில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. சம்பவம் தொடர்பாக பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த)

## மீள் குடியமரும்...

குடும்பங்களும், நண்பர்கள் உறவினர்களுடன் வாழும் 158 ஆயிரம் குடும்பங்களும் குடியமர்த்தப்படவுள்ளன.

போர்நிறுத்த ஒப்பந்தம் செய்யப்பட்ட பின்பு 70ஆயிரம் குடும்பங்கள் அரச உதவிகள் பெறாமலேயே தத்தமது இடங்களுக்குத் திரும்பியுள்ளனர். அவர்களுக்கே கொடுப்பனவுகளில் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்.

மீள் குடியமர்வுக்கு அடிப்படை வசதிகளான வீதிகள், சுகாதாரம், கழிவகற்றல்,. குடிநர், கல்வி போன்ற உட்கட்டமைப்பு வசதிகளும் ஏற்படுத்தப்படவுள்ளன.

இது விடயத்தில் ஐந்து இலட்சம் பேர்களை மீளக் குடியமர்த்துவதற்கு தேவையான நிதி வசதிகள் அரசாங்கத்திற்கு கிடைத்துள்ளது என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா அமைச்சரவையில் எடுத்துக் கூறினார். இடம் பெயர்ந்தவர்கள் தத்தமது சொந்தக் காணிகளிலேயே மீளக் குடியமர்த்தப்படுவர். இது சாத்தியமிலாதவிடத்து வேறு பொருத்தமான இடங்கள் பற்றி கருத்தில் கொள்ளப்படவுள்ளது. (இ)

## அதாவுல அணி...

என்று கேட்டார். இதற்கான அனுமதி வழங்கப்பட்டது. இதனையடுத்து நாளை மறுதினம் வீடியோ பிரதியை நீதிமன்றத்தில் பார்வையிடுவதற்கான ஒழுங்குகள் செய்வதென்று முடிவு செய்யப்பட்டது.

மனுதாரர் ராவூப் ஹக்கீம் கேட்டுக்கொண்டபடி உறுப்பினர்கள் கட்சியின் பதவிகளில் செயற்படக் கூடாதென ஏற்கனவே பிறப்பிக்கப்பட்ட இடைக்கால தடையுத்தரவும் 10ம் திகதிவரை நீடிக்கப்பட்டது. மனுதாரர் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி இக்ரம் முகமது, சட்டத்தரணி நிசாம் காரியப்பர் ஆகியோர் ஆஜராகியிருந்தனர். (இ)


## விஷேட...

முதல் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

சிறுவர்கள் புலிப்படையில் சேர்க்கப்பட்டமை தொடர்பாக பொலிஸ் நிலையங்களில் செய்யப்பட்ட முறைப்பாடுகள் குறித்தே இந்த விசேட பொலிஸ் குழு ஆராய்ந்து வருகின்றது.

முறைப்பாட்டுக்காரர்கள் எவரும் இதுவரை விசாரணைக்குட்படுத்தப்படவில்லையெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)





யாழ். செயலகத்தில் நேற்று நடைபெற்ற புனர்வாழ்வு அமைச்சின் கூட்டத்தில் கலந்து கொண்டவர்களை படங்களில் காணலாம்.
படம்:- பவன்

MEDICAL CHECK UP
வைத்திய பரிசோதனை
நோய் வருமுன் காப்போம்
திடீர் மரணத்தைத் தவிர்ப்போம்
40 வயதிற்கு மேற்பட்ட நோய் உள்ள, நோய் அற்ற அனைவரும் இந்த MEDICAL CHECK UP ஐச் செய்வதன் மூலம் நோயற்ற சுகவாழ்வு வாழலாம்.
X-RAY, ECG, சில முக்கிய இரத்தப் பரிசோதனைகள்.
சிறுநீர்ப்பரிசோதனை.
இலவச வைத்திய ஆலோசனையுடன் கூடிய MEDICAL CHECK UP குறைந்த கட்டணத்தில்! விபரங்களுக்கு நேரில்!
போக்குவரத்து வசதி கருதி
சம்பந்தர் மொடேர்ன் கிளினிக்
(அமுல் கிறீம் ஹவுஸ் அருகில்)
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
[C/5602]

இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.02.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.